24 பக்கம்

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஆகஸ்ட்.14 - ஓகஸ்ட்.20 , 2013 ரூ.30



யாழ்.கோட்டை:

## அடையாளமா அவமானமா ?



## வெலிவேரியா பலிக்கடாக்கள்

## வருகிறாள் தேர்தல் தேவி

20 வருடங்களுக்குப் பிறகு தன் தாய் வீட்டுக்கு எட்டிப் பார்க்க ஆசைப்படுகிறாள் யாழ் தேவி. ஆனாலும் அவளைத் தேர்தல் தேவியாக்கி, சிலர் வாக்கு வியாபாரம் செய்ய எண்ணுகிறார்கள்.



1717 FOLLOW US www.mobitel.lk

சிறப்புமிகு ரம்ழான் மாதத்தில்
சிறப்புமிகு IDD கட்டணங்கள்

குறித்த கட்டணங்கள் IDD Buddy ... விஷேட அழைப்பு முறை கொண்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பஹ்ரெய்ன் | ரூ. | 4.00 | ஓமான் | ரூ. | 12.00 |
| சைப்ரஸ் | ரூ. | 1.00 | கட்டார் | ரூ. | 15.00 |
| யோர்தான் | ரூ. | 9.00 | சவூதி அரேபியா | ரூ. | 8.00 |
| குவைட் | ரூ. | 6.00 | | | |
| லெபனான் | ரூ. | 9.00 | ஐக். அரபு இராஜ்ஜியம் | ரூ. | 12.00 |

20 Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எஞ்சிக்கிடக்கும் தேவதைக் கனவு....!



**என் எண்ணமெல்லாம், என் அருகில் விழுந்து வெடித்ததைப் போலவே இருந்தது. அந்தக் கணத்தில் நான் என்ன செய்தேன் என்று எனக்கே தெரியாது. கண்களை மூடிக்கொண்டு, காதுகளைப் பொத்திக் கொண்டு, ''கடவுளே கடவுளே'' என்று உளறினேன்.**

**ஜெரா**

*2006.08.14.* நான் மறக்க நினைக்கும் நாள். மாவிலாறு வறண்டு வெடித்துக் கிடந்த காலப்பகுதி. விவசாயிகள் நெற்பயிர்களின் உயிர்களுக்கு உயிர்ப் பிச்சைகேட்டு உண்ணாவிரதப் போரை ஆரம்பத்திருந்தார்கள். குளம் தன் கதவுகளை இறுக்கி மூடிக்கொண்டது. அதன் மடை திறப்புக்காக ரவைகளை சாப்பிட்டு வளர்ந்தவர்கள் ஏ.கே.47களை கையிலெடுத்திருந்தனர். வயல்கள் சூனியப் பலகைகளைத் தம் கழுத்தில் மாட்டிக் கொண்டு மிதிவெடிகளைப் பயிரிடுவதற்காக தயார் செய்யப்பட்டன.

வடக்கு- கிழக்கின் எல்லாப் பகுதிகளிலும் யுத்தம் பற்றிய கிசுகிசுக்கள் வேகமாகப் பரவின. மப்பும் மந்தாரமுமான ஒரு காலநிலை பெரும் இரத்த வெள்ளப்பெருக்கு ஒன்றுக்கான வானிலை அறிவிப்பை பிரபல்யப்படுத்தியது. மூன்று நாட்களில் யாழ்ப்பாணத்தைப் பிடிப்போம் என்ற உணர்ச்சி வாக்கு பட்டிதொட்டியெல்லாம் எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

நான் அப்போது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். முல்லைத்தீவு நகர்க்கரையோரம் தொடக்கம், நாயாறு வரைக்குமான கரையோர மணற்பரப்பில் அமைக்கப்பட்டிருந்த சுனாமி இடைத்தங்கல் முகாம்களில் உள்ள சிறார்களுடன் சந்தோசமாய் பொழுதைக் கழிப்பதே எனக்கு தரப்பட்டிருந்த வேலை. முல்லைத்தீவின் வண்ணாங்குளத்திலிருந்த ஒருமுகாமின் குழப் படிக் குழந்தைகளும் என் பொழுதுகளைப் பகிர்ந்து கொள்வார்கள். குழந்தைகளைப் போலவே தான் அவர்களின் அப்பா, அம்மாக்களும் கதையிலும், சிரிப்பிலும் அன்பொழுகும். ஒரு சட்டிக்குள் நிரம்ப சோறும், உப்பு மற்றும் அரைத்த மிளகாய் மட்டும் சேர்த்த மீன் குழம் பும் பல வேளைகள் என் வயிற்றைப் பூரண மாக்கியிருக்கின்றன.

ஒருநாள் மாலை நான்கு மணி. மணல் சூடு குறையத் தொடங்கியிருந்தது. அன்றைய தினம் விடிந்ததிலிருந்து வண்டு (ஆளற்ற வேவு விமானத்துக்கு இடப்பட்டிருந்த சிறப்புப் பெயர் அது. கிபீர் அடிக்கத் தொடங்க முன்னர் கட்டாயம் இது வானில்வட்டமடிக்கும்) வட்டமிட்டுக் கொண்டிருந்தது. குழப்படிகளுடன் மணற் பரப்புக்குள் குதித்தேன். 'குலை குலையாய் முந்திரிக்காய் நரிய நரிய சுத்திவா' களைகட்டி யது. பெற்றோர்களும் சிரித்துக் கைதட்டி ஆரவாரித்தனர். ஒரே சத்தமாயிருந்தது. திடீரென பேரிரைச்சல் ஒன்று வானைக் கிழித்துக் கொண்டு புகுந்தது. பிள்ளைகளும், பெரியவர்களும் பீதியுடன் தத்தம் குடிசைகளுக்குள்ளும், பதுங்கு குழிகளுக்குள்ளும் ஒழித்துக் கொண்டனர். எனக்கு வழமையாகவே அவர்களை விடப் பயம். வற்றாப் பளை நிலவெளியை வானிலிருந்து விழுந்த குண்டுகள் பிளந்தன. நான் இருந்த இடத்திலிருந்து மூன்று கிலோ மீற்றர்கள் கூட வராது. என் எண்ணமெல்லாம், என் அருகில் விழுந்து வெடித்ததைப் போலவே இருந்தது. அந்தக் கணத்தில் நான் என்ன செய்தேன் என்று எனக்கே தெரியாது. விழுந்தேன், படுத்தேன், ஓடினேன். கடைசியாய் தரப்பாளும், தகரமும் கலந்து கட்டிய வீட்டோரம் குந்தியிருந்தபடி, கண்களை மூடிக் கொண்டு, காதுகளைப் பொத்திக் கொண்டு, ''கடவுளே கடவுளே'' என்று உளறினேன்.

''அண்ணா படுங்கோ! குப்புறப் படுங்கோ. கால்கள் அரையடி தூரத்தில அகட்டி நிலத்தோட ஒட்டுங்கோ..காதை நெஞ்சோட சேத்துப் பொத்துங்கோ..'' எங்கிருந்தோ வந்த ஒரு பெண்ணின் கட்டளைக் குரல் எனக்கு விமானத் தாக்குதலிலிருந்து தப்புவதற்கான பயிற்சியை வழங்கிக் கொண்டிருந்தது. இரண்டு கிபீர்களும் நான்கு தடவைகள் அடித்துப் போன பின்பு எழும்பி உடம்பில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிக் கொண்டு நிமிர்ந்து பார்த்தேன். கண்ணாடிக்கு முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தவள் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு, ''சின்னாக்களோட விளையாடுற ஆக்கள் இப்படியா பயப்புடுறது'' என்றாள். எங்கிருந்தோ சுரந்த வெட்கம் தலைகுனிய வைத்தது. சிரிப்பில் மறைக்க முயன்று தோற்றேன். வாகனத்தில் ஏறி ஓடிச் சேர்ந்துவிட்டேன். பின்னர் அந்த முகாமுக்கு போவதென்றால் வெட்கமாயிருக்கும். போயே ஆகவேண்டும். ஏனெனில் சம்பளம். புதிய திட்டங்களுடன் சிறுவர்களின் களத்தில் குதித்தேன். அவள் வீட்டுக்குள் இருந்து எட்டிப் பார்த்தால் குழம்பிப் போய்விடுவேன். கொஞ்ச நாள்களில் அவளும் எங்கள் கூட்டணியில் இணைந்துகொண்டாள். திவ்வியா, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் விஞ்ஞானப் பிரிவில் 2006 ஆம் ஆண்டுக்கான கெட்டிக்கார மாணவியாம். அவள் விபரம் சொன்னாள். அதிகமான அளவில் புதிய சிந்தனைகளாலும், துறுதுறு செயல்களாலும் நிரம்பப் பெற்றவள் தான் நான் பார்த்த திவ்வியா. வேகமாக மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் அவளுக்கு அலாதிப் பிரியம். நல்ல நண்பர்களானோம். அந்தச் சமூகத்தில் ஆண்- பெண் உறவென் பது சந்தேகத்துக்கு இடமற்றது. ''நான் டொக்ரராய் வரவேணும், அதுக்கான எல்லா தகமையும் எனக்கு இருக்க வேணும், இது தான் அண்ணா என்ரை லட்சியம்'' ஒரு நாள் சிறுவர்களிடம் இலட்சியம் பற்றி கேட்டபோது சொன்னாள். இந்த எண்ணத்தை அவளின் எல்லா செயல்களிலும் கண்டிருக்கின்றேன். பரதம் இவளிடமிருந்து புது ரசங்களைக் கற்றுக் கொண்டிருக்கும். அந்த முகாமி லிருந்து மூன்றுமாத குழந்தைக்கும் திவ்வியா நெருக்கமான நண்பி. என்னிடமிருந்து அவள் அதிகம் எதிர்பார்த்தது புத்தகங்களைத்தான். பரிசளித்திருக்கிறேன்.

நம் நட்புக் காலம் இளவேனில் பொழுது களை அனுபவித்துக் கொண்டிருந்தபோது வன்னிக்குள் போர்க்காற்று வேகமாக வீசத் தொடங்கியது. ஏ9 வீதி மூடப்படப்போவ தாக செய்திகள் பரவுகின்றன. இளையவர் கள் காணாமல் போவது பற்றிய செய்திகள் என் அம்மாவை என்னை வன்னியை விட்டு வெளியேற்றும் பணிக்குத் தள்ளியது. உயர்கல்விக்காக அங்கிருந்து புறப்பட்டேன். அந்தக் கடைசி நாள் மறக்க முடியாத கணங்களால் நிரம்ப வழிந்தது. பயணம் சொல்வதற்காக திவ்வியாவின் வீட்டுக்குப் போனேன். வித்தியானந்தாவில் தமிழ்த் தினப் போட்டி நடக்குதாம். அதுக்குப் போயிட்டாள். அவளது அம்மா சூடான தேநீரோடு விடைதந்தாள்.

வித்தியானந்தாக் கல்லூரியின் முன் இருந்த சரஸ்வதி சிலைக்கும், தேமாமரத் துக்கும் இடையில் எமது கடைசி சந்திப்பு நிகழ்ந்தது. நல்ல சிவப்பு நிற ரீசேர்ட்டுடன், கையில் ஹெல்மெட்டை வைத்திருந்தபடி என்னோடு பேசத் தொடங்கினாள். வார்த்தைகள் குறைப்பிரசவமாகின. எனக்கும்தான். அவளின் எல்லா உணர்வுகளையும் மூடி மறைத்தபோது கண்ணீர் வெடித்துச் சிதறியது. கதையை திசைமாற்றினாள். ''எங்களுக்கு அடுத்த கிழம ஒரு வகுப்பிருக்கு. போகவேணும். எல்லாப் பள்ளிக்கூட பிள்ளையளும் வருவினம். நான் முல்லைத்தீவில இருந்து கோல் எடுப்பன். கடிதம் போடுவன்''. ஏதேதோ புசத்தினாள். என் மனமும் கண்களும் விம்மி வெடித்தன. நான்கைந்து பாட சாலைப் பிள்ளைகள் எம்மை பார்த்துக் கொண்டிருந்தனர். நான் விடைபெற்றுக் கொண்டேன். பாடசாலைப் படலையடி யில் வந்து திரும்பிப் பார்த்தேன். மறை யும் வரை பார்த்துக் கொண்டேயிருந் தாள். நான் கடைசியாய் மறைந்தபோது அவளை யறியாமலேயே கையசைத்தாள். என் அம்மா போல். இந்த உறவுக்கு என்ன பெயர். இப்போதும் சொல்லத் தெரியவில்லை. மறுநாள் வன்னியை விட்டுப் புறப்பட்டேன்.

பல்கலைக்கழக படிப்பைத் தொடங்கியிருந்தேன். நான் வந்ததும் ஏ9 பூட்டிக் கொண்டது.

*14.08.2006* செஞ்சோலைக்கு கிபீர் விமானங்கள் தாக்குதல் நடத்தி 60க்கும் மேற்பட்ட பிள்ளைகள் மரணித்த செய்தி பிணப்படங்களுடன் பரவியது. அன்றைய இரவு, திவ்வியாவும் சிதறிப் போனாள் என்ற செய்தியை நண்பன் தொலைபேசியில் சொன்னான். என் அறையைக் கண்ணீர் கழுவியது. அவள் கையெழுத்திட்ட நினைவுக்குறிப்புக் களைத் திறந்து பார்த்தேன். திவ்வியா அழகாய் சிரித்துக் கொண்டிருந்தாள்.

குறிப்பு- இது வெளியாகி சில தினங்களில் முல்லைத்தீவிலிருந்து ஒரு கடிதம் வந்தது. திவ்வியாவின் குடும்பத்தினர் அனைவருமே இறுதிப் போரின் போது பதுங்கு குழியில் ஷெல் விழுந்து மரணித்து விட்டதாக அதில் சொல்லியிருந்தார் கடிதம் எழுதியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் மட்டும்...

**இளையோருக்கான புதிய பகுதி!**

## காதல் ஜோதிடம்

### உங்கள் பொருத்தம் எப்படி?



காதலர்கள் கட்டாயம் அறிய வேண்டிய சங்கதிகள்...

**செவ்வாய்:**

இவர்தான் ஆண்மைக்கும், பெண்மைக்கும், உணர்ச் சிக்கும், வீரியத்துக்கும் காரண கர்த்தா. காதலிலும் காம உறவிலும் அதிக சுகத்தை ஏற்படுத்துபவர். ஆண், பெண் உடலில் காதல் தீயை உண்டாக்குபவர். உடல் உறவில் பலத்தையும், வீரியத்தையும், வேகத் தையும் தருபவர்.

**புதன்:**

ஆணும் இல்லாத பெண்ணும் இல்லாத தன்மை உடையவர். நரம்பு மண்டலத்தை ஆள்பவர். ஆண்மையின் உந்து சக்தியாக விளங்குபவர். ஆண் ஆண்மையுடன் இருக்கவும், பெண்ணிடம் பெண்மை இருப்பதற்கும் காரணம் இவரே.

**சந்திரன்:**

மனோகாரகன். மனதை ஆள்பவர். கற்பனை உலகத்தில் திளைக்கச் செய்பவர். சபல எண்ணங்கள், சஞ்சல புத்தி உண்டாகக் காரணமானவர். காதல் செய்யத் தூண்டுபவர்.

**காமத்தை நிர்ணயிக்கும் வீடுகள்**

ஒருவருக்கு காதல் இனிப்பதற்கு அவரது ஜாதகத்தின் 3, 4, 7 மற்றும் 12-ம் இடங்கள் சிறப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

**அதிரடி காதலர்கள்**

மூன்றாம் இடம்: ஒருவரின் ஜாதகத்தில் லக்னத்தில் இருந்து மூன்றாம் இடம் திட, தைரிய, வீரிய ஸ்தானமாகும். இந்த இடத்தில் இருந்து ஒரு ஆணின் வீரியத்தை பற்றி அறிந்துகொள்ளலாம். இந்த இடத்தில் பாவ கிரகம், நீச்ச கிரகம் இல்லாமல் இருப்பது நல்லது. அதேபோல் இந்த வீட்டின் அதிபதி நீச்சம் அடையாமல், 6, 8, 12-ல் மறையாமல் இருப்பது அவசியம். மூன்றாம் வீட்டை குரு பார்த்தால் ஆண்மகன் நல்ல சக்தியுடன் இருப்பான். காதலில் அதிரடியாக இருப்பான். மூன்றாம் வீட்டை சனி, புதன் பார்த்தால் காதல் சற்று சுணக்கமாக இருக்கும். மூன்றாம் வீட்டில் நீச்ச கிரகம் இருந்தாலும், பார்த்தாலும் காதல் மந்தமாகவே இருக்கும். புதன், சனி ஆகிய திசாபுக்தி, அந்தரங்களில் இந்த குறைபாடு அதிகம் இருக்கும்.

**உஷார் காதலர்களே.. உஷார்!**

நான்காம் இடம்: இது சுக ஸ்தானம். எல்லா விதமான சுகங்களுக்கும் இந்த இடம்தான் முக்கியம். இந்த இடம், இந்த இடத்தின் அதிபதி பலம் பெற்று இருந்தால் காதல் சிறப்பாக நடக்கும். பெண்கள் ஜாதகத்தில் நான்காம் இடம் கற்பு ஸ்தானம். ஒழுக்க நெறியை பற்றி சொல்லும் இடம். நான்காம் இடம், நான்காம் அதிபதி பலமாக இருந்தால் ஒழுக்கம் தவறாத காதல், நெறி தவறாத வாழ்வு அமையும். நான்காம் வீட்டில் பாவ கிரகங்கள், நீச்ச கிரகங்கள், தீய கிரகங்கள் இருந்தாலும், பார்த்தாலும் கூடா நட்புகள் தேடி வரும். காதலனிடம் உஷாராக இருக்க வேண்டியது அவசியம்.

(அடுத்த வாரமும் தொடரும்....)

## பிரிந்த காதலர்கள்



அண்மையில் திருமணம் செய்து கொண்ட சினிமா உலகக்காதல் ஜோடிகளான பிரசன்னாவும் சினேகாவும் பிரிந்து விட்டார்கள்.

கேட்டவுடனேயே உங்களுக்கு அதிர்ச்சியாகத் தான் இருக்கும். ஆனால் விடயம் நீங்கள் நினைப்பதைப் போல பாரதூரமானதல்ல.

உண்மையில் இது நிஜ மான பிரிவல்ல... விளம் பரத்துக்கான பிரிவு!

பிரசன்னாவும் சினேகாவும் சேர்ந்து ஒரு கைத்தொலைபேசி விளம்பரப் படம் ஒன்றில் நடித்தனர். தமிழகத்தில் புதிதாகத் திருமணமானவர்களைப் பிரித்து ஆடி மாதம் பெண் வீட்டுக்கு அனுப்பி வைப்பது வழக்கம். இந்த விளம்பரப்படத்திலும்

புதிதாகக் கல்யாணமான சினேகா, பிரசன்னா காதல் ஜோடியையும் பிரிக்கிறதாம் இந்த ஆடிமாசம். அந்தப் பிரிவே தெரியாம இருக்க எங்களிடம் போன் வாங்கி எப்போதும் சேர்ந்து இருங்கள் என்று சொல்கிறது அந்த விளம்பரம்.

திருமண வீடியோவை விற்று காசு பார்த்த பின்னர், பிரிவு என்ற விஷயத்தையும் விளம்பரமாக்கிப் பணம் பார்த்திருக்கிறது இந்தக் காதல் ஜோடி.

## எல்லோருக்கும் பிடித்த காதல் பரிசு



காதலிக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று ஒவ்வொரு காதலர்களும் தலையைப் பிய்த்துக் கொள்வார்கள். காதலிக்குப் பிடித்தமானதாகவும் அதேசமயம் என்றென்றும் தங்கள் காதலை நினைவுபடுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்றும் காதல் பரிசை தேர்வு செய்யும் விடயத்தில் காதலர்கள் அக்கறை காட்டுவார்கள்.

அண்மையில் இந்தக் காதல் பரிசு பற்றிய காதலர்களின் அலைச்சல் பற்றி நண்பர் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அப்போது அவர்,

''இதற்கு ஏன் தலையைப் பிய்க்க வேண்டும். காதலின் சின்னமாக நமது காலடியிலேயே ஒரு பொருள் இருக்க ஏன் ஊரெல்லாம் காதல் பரிசு தேடி அலைய வேண்டும்?'' என்று என்னைக் கேட்டார்.

''ஆனால் அது எல்லாப் பெண்களுக்கும் பிடிக்கக் கூடியதாக இருக்க வேண்டுமே. ஏனெனில் ஒவ்வொரு பெண்களும் ஒவ்வொருவிதமான விருப்பு உடையவர்கள். ஆகவே தங்களின் காதலிக்கு என்ன விருப்பமோ அதற்கு ஏற்றபடிதானே காதலர்கள் பரிசைக் கொடுக்க முடியும்'' என்று சொன்னேன்.

அதற்கு அவர் ''இல்லை இல்லை. இது எல்லாப் பெண்களுக்கும் பிடிக்கும். அத்தோடு காதலுக்கு இதைவிட நல்ல சின்னமும் கிடையாது'' என்றார். ஆவலை என்னால் அடக்க முடியவில்லை.

''அப்படி என்னதான் அந்த அற்புதப் பரிசு?'' என்று வாய்விட்டுக் கேட்டேன்.

''வேறொன்றும் இல்லை. செருப்புத்தான்'' என்று சர்வசாதாரணமாகச் சொன்னார் நண்பர்.




''ஏன் காதலைச் சொல்லப்போகும் காதலரை நடுறோட்டில் வைத்து செருப்பால் அடிப்பதற்கா?'' நக்கலாகக் கேட்டேன்.

''நீங்கள் தவறாக புரிந்து கொண்டுள்ளீர்கள். பொதுவாக எல்லாப் பெண்களுக்கும் காலணி மீது காதல் அதிகம். அத்தோடு காலணியை எப்போதும் சோடியாகப் பயன்படுத்த முடியும். ஒன்று தொலைந்து விட்டாலோ அல்லது அறுந்துவிட்டாலோ மற்றையது பயன் பாட்டுக்கு உதவாமல் போய்விடும். ஒன்றில்லாமல் இன்னொன்று இருக்க முடியாது. அதனால் தான் காலணியைவிட காதல் பரிசு வேறொன்றும் இருக்க முடியாது'' என்று விளக்கினார். அவர் சொல்வதும் சரிதானே.

## காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



**அனுப்ப வேண்டிய முகவரி:**
**காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு**
**சுடர் ஒளி**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெலிவேரியா பலிக்கடாக்கள்

■ ஹரன்

இலங்கையில் எந்த மூலையிலும் அரசுக்கெதிரான சின்ன முணுமுணுப்புக் கேட்டாலும் கூட அவற்றுக்கு இராணுவத்தின் தோட்டாக்கள் தான் பதில் சொல்லும் என்ற உண்மையை போட்டுடைத்திருக்கிறது வெலிவேரியா துப்பாக்கிச் சூட்டு சம்பவம். அநியாயமாக மூன்று உயிர்களைப் பறித்ததோடு 40 இற்கு மேற்பட்டோரை படுகாயப்படுத்திய சாதனையை ஒரேநாளில் படைகளின் துப்பாக்கிகள் செய்திருக்கின்றன. இந்தச் சம்பவம் வெறும் இராணுவ உள்ளக விசாரணையுடன் முற்றுப்பெற்றுவிடுமா என்ற சந்தேகமே இன்று மேலேழுந்திருக்கிறது. வெலிவேரியா சம்பவம் குறித்து அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பகிரங்க மன்னிப்புக் கேட்டாலும்கூட அதனை ஏற்றுக்கொள்ள வெலிவேரிய மக்கள் தயாராக இல்லை. மூன்று சிங்கள உயிர்களுக்காக மன்னிப்புக்கேட்டுள்ள அரசு வகைதொகையின்றி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூட அனுமதி வழங்க இன்னமும் பின்னடித்தே வருகிறது.

''பொதுமக்களைச் சுட்டோம். ஆனால் இறந்தது எத்தனை பேரென்று எண்ணவில்லை'' என்று நக்கல் கதையுடன் முள்ளிவாய்க்கால் மரணங்களை மண்போட்டு மூடிய அரசு, இப்போது வெலிவேரியா சூட்டுச் சம்பவத்தை மண்போட்டு மூட முடியாமல் அலைகிறது. 2009 மே மாதத்திற்கு பிறகு துருப்பிடித்துப் போயிருந்த இராணுவத் துப்பாக்கிகள் மீண்டும் உயிர்குடித்த திருப்தியுடன் உள்ளன. இவற்றை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார் பொலிஸ் பேச்சாளர் புத்திக்க சிறிவர்த்தன. ஆயுதங்களை விசாரணை நடத்தும் ஆச்சரியமான நாடு எங்களது தானே. வழமையாக இலங்கைத் தீவில் ஏதோ ஒரு மூலையில் ஏதோ ஓர் அசம்பாவிதம் நிகழ்ந்தால் அது கேட்டுக்கேள்வியின்றி இனந்தெரியாதவர்களின் தலையிலேயே போடப்படுவதுண்டு. சிறிது காலத்திற்கு சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் பேச்சாளரும் ''எல்லாம் முடிந்தது ஆள்களை பிடிப்பது தான் மிச்சம்'' என்று கதைவிட்டு, நல்ல பிள்ளைக்கு நடிப்பார். சில மாதங்களுக்கு இந்தக் கதையே தொடரும். காலம் செல்லச் செல்ல அது மறத்தலின் சம்பவமாக மாறிவிடும். இதுவே இலங்கைத் துயரங்களில் அரசு காலாதி காலமாக பின்பற்றி வரும் வழக்கமான கொள்கை.

> **''நான் இருந்திருந்தால் இப்படி மக்களை சுட விட்டிருக்கவே மாட்டேன். இது இராணுவத்திற்கு ஏற்பட்ட வரலாற்றுக் கறை''**

ஆனால் வெலிவேரியா சம்பவத்தை அப்படி மறக்கடிக்க முயன்றும் அது படுதோல்வியில் முடிவடைந்து விட்டது. இது அரசுக்கு கடுப்பை கிளப்பியிருக்கிறது. 'என்ன தான் செத்த மீன் துடிக்குது' எனக் கூறினாலும் சிங்கள மக்கள் அதை நம்பப் போவதில்லை என்பதை அரசு இப்போது உணர்ந்துள்ளது. அதனாலே தான் வாக்கு வங்கியைக் காப்பாற்றிக் கொள்ள துப்பாக்கிகளை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்புதல், பாதுகாப்பு செயலரிடம் மனித உரிமை ஆணைக்குழு விசாரணை நடத்துதல், உயரதிகாரிகளை பதவி நீக்கம் செய்தல், இராணுவ உள்ளாய்வு விசாரணையை மேற்கொள்ளல், பாதிப்படைந்த குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கல் என்று ஏராளமான சமாளிப்பு வேலைகளில் இறங்கியுள்ளது. இவற்றைச் செய்திகளாக்கி தினம் தினம் வெட்கமின்றி வெளியிட்டும் வருகிறது.

ஆனால் இந்தச் சமாளிப்புகள் சிங்கள பிரதான எதிர்க்கட்சிகளையும், மக்களையும் அரசு நினைப்பது போன்று திருப்திப்படுத்தவில்லை. முள்ளிவாய்க்காலில் குண்டு வீசிய போது ஏதோ கிரிக்கெட் போட்டி பார்ப்பதை போல கை தட்டி ரசித்தவர்கள் இப்போது தங்கள் மீது துப்பாக்கி திரும்பியவுடன் துள்ளிக்குதிக்கிறார்கள். '' இனிமேல் நாடாளுமன்றில் ஏதாவது அமளி ஏற்பட்டாலும் இராணுவம் தான் வரவழைக்கப்படுமோ?'' என சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெட்கத்தை விட்டு அச்சத்தோடு சபாநாயகரிடம் கேட்டுள்ளார். அந்தளவுக்கு நிலைமை பூதாகரமாக மாறியிருக்கிறது. சிங்கள மக்களை மாத்திரமல்லாது எதிர்க்கட்சிகளையும் சமாளிக்க முடியாமல் அவர்களின் கேள்விகளுக்கு பதில்சொல்ல வக்கின்றித் திக்கு முக்காடிக்கொண்டிருக்கிறது அரசு.

இதைவிட ''இராணுவத்திற்கு கெட்ட பெயரை ஏற்படுத்துவதற்காக கும்பல் ஒன்றே பொதுமக்களை சுட்டிருக்கிறது'' என்று புதிய கதையொன்றை அமைச்சர் ஒருவர் அவிழ்த்து விட்டிருக்கிறார். இராணுவத்துக்கு முன்னால் துணிச்சலோடு புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவுக்கு ஆயுதக்குழு ஒன்று இருக்கிறது என அந்த அமைச்சர் தெரியாத்தனமாக உளறியிருக்கிறார். பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என அமைச்சருக்கு யாரும் கற்றுக் கொடுக்கவில்லை போலும். பொய் சொல்வதில் சமர்த்தர்கள் நிறைந்த இலங்கையில் இப்படிப் பொய் சொலத் தெரியாத அமைச்சர்கள் இருப்பது அரசுக்குத்தான் அவமானம். அவர்களுக்கு எப்படி நம்பும்படியான பொய்களை அவிழ்த்து விடுவதென்று போதிய பயிற்சி வழங்க வேண்டிய நடவடிக்கையை தாமதமின்றி அரசு எடுக்கவேண்டும்.

வெலிவேரியாவில் உயிரிழந்தவர்கள் சிங்கள மக்கள் என்பதால் முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் நாயகனும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவும் இந்தச் சம்பவம் தொடர்பாக சீறி விழுந்திருக்கிறார்.

''நான் இருந்திருந்தால் இப்படி மக்களை சுட விட்டிருக்கவே மாட்டேன். இது இராணுவத்திற்கு ஏற்பட்ட வரலாற்றுக் கறை. எனினும் இந்தக் கறையை மறைக்க கதைகளைச் சொல்லும் புதிய இராணுவத் தளபதி காற்சட்டையுடன் தான் கதைக்கிறாரா என்று சந்தேகமாகத் தான் இருக்கிறது'' என சிங்கள மக்களின் உயிர்கள் மீதான விசுவாசத்தை காட்டியிருக்கிறார் பொன்சேகா. சிங்கள மக்கள் என்றால் உயிர்; தமிழ் மக்கள் என்றால்....?


அப்பாவி மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்க துப்பாக்கிகள் தான் பொருத்தமென்ற நினைப்பிலேயே அரசு செயற்பட்டு வருகின்றது. மக்களின் போராட்டங்கள் மீது இராணுவத் துப்பாக்கிகள் தொடர்ச்சியாக ஏவப்பட்டு வருகின்றன என்பதற்கு வெலிவேரியா சம்பவம் நல்ல சாட்சி. வடக்கு நோக்கி துப்பாக்கிகள் திரும்பியிருந்த பொழுதுகளில் இனவாதம் கதைத்தவர்கள் இப்போது தான் ஜீவகாருணியத்தைப் பற்றிக் கதைக்கிறார்கள்.

எல்லாம் காலம் கடந்த ஞானம். ஏனெனில் துப் பாக்கிகளுக்கு உயிர் குடிக்க மட் டுமே தெரியும்; தமிழர். சிங்களவர்கள் என்ற பேதங்கள் அவற்றுக்குத் தெரியாது.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சண்டித்தனமும் பின்வாங்கலும்

**போர்** முடிவுற்ற பின்னரான காலத்தில் எவருக்கும் அடிபணியாத்தனத்துடன், தான் நினைத்தை நினைத்த காலத்தில் செய்து வந்த இலங்கை அரசு, திடீரென தனது நிகழ்ச்சி நிர லில் முன்வரிசையில் இருந்த சில நடவடிக் கைகளை அடுத்த சில மாதங்களுக்குப் பின் நோக்கி நகர்த்தியுள்ளது. இதற்கு சர்வதேசத் தினதும், இந்தியாவினதும் தொடர்ச்சியான அழுத்தங்களே காரணமாகும்.

-13 ஆவது திருத்தத்தை நீர்த்துப் போகச் செய் வதற்காக இலக்கு வைக்கப்பட்டுத் திட்டமிடப் பட்ட அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத் தம் - 13 ஆவது திருத்தத்தில் மேற்கொள்ளப்பட வென இருக்கும் திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட நாடாளு மன்ற தெரிவுக் குழுவின் நடவடிக்கை ஆகிய இரண் டையுமே அரசு இவ்வாறு ஒத்திப்போட நேர்ந் துள்ளது.

எனினும் மாகாணசபைகளுக்கு அளிக்கப்பட் டுள்ள சில அதிகாரங்களைத் திட்டமிட்டவாறு நீர்த்துப் போகச் செய்வதற்கு முன்னராக வட மாகாண சபைக்கான தேர்தலுக்கு அழைப்பு விடுப் பதென்பதே அரசுக்கு பிரதானமான பிரச்சினை யாக இருந்து வந்தது. ஆயினும் இந்தியாவினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தத்தின் நிமித்தமே ராஜபக்ஷ அரசு அதன் திட்டங்களைச் செயற் படுத்தும் வேகத்தினைக் குறைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது.

> **இந்திய - இலங்கை உடன்படிக்கையினை இலங்கை அரசு மதித்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டு ம் என்பதே மேனன் ஜனாதிபதிக்குத் தெரிவித்த செய்தியாகும்.**

இன நல்லிணக்கம் தொடர்பில், சர்வதேச சமூகத்துக்கு மஹிந்த அரசு வழங்கிய உறுதி மொழி களை மதித்து அதன்படி நடந்து கொள்ள வேண் டும் என்று கடும் தொனி யில் இந்தியா, அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு சொல்லியிருந்தது.

அத்துடன் ஜனாதிபதி ராஜபக்ஷவினால் தேசியப் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தத்துக் கும் அப்பால் சென்று மேலதிகமாக வழங்கப் படுமென அளிக்கப்பட்ட உறுதி மொழிகளை நடை முறைப்படுத்துமாறும் இதன்போது இந் தியா மீளவும் நினைவுபடுத்தியது.

அதன் பின்விளைவுகளாகவே பஸில் ராஜபக் ஷவின் இந்தியப் பயணமும், அதனையடுத்து சிவ சங்கர்மேனனுடனான ஜனாதிபதியுடனான காலை நேர உணவுச் சந்திப்புமாகும். இதன் போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் வலுவான செய்தி களை ராஜபக்ஷவுக்குத் தெரிவித்திருந்தார் மேனன்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையினை இலங்கை அரசு மதித்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டு ம் என்பதே மேனன் ஜனாதிபதிக்குத் தெரிவித்த செய்தியாகும்.

இந்தியாவின் கடுந்தொனிச் செய்திகளை ராஜ பக்ஷ நிர்வாகத்தினால் ஜீரணித்துக் கொள்வது கடினமாகவுள்ளது.

இனிவரும் காலங்களில் ராஜபக்ஷ அரசு நல் லிணக்கம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர் பில் எடுக்கும் நடவடிக்கைகளிலேயே சர்வதேச அரங்கில் இலங்கைக்கான இந்திய அரசின் ஆதர வின் நிலைப்பாடும் தங்கியுள்ளது. இதனை யும் மேனன் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கத் தவற வில்லை. இதன் பின்னர்தான் தனது சாக்குப் போக் குக்காட்டும் வெளியுறவுக் கொள்கை இலங்கைக் கும் இந்தியா வுக்குமிடையிலான உறவுகளில் எவ்வளவுதூ ரம் கசப்புணர்வுகளை ஏற்படுத்தியுள்ள தென்பதை அரசு உணர்ந்து கொண்டது. இதன் விளைவாகவே மேனன் ஊடாக 13 ஆவது திருத் தத்தில் சில மாற்றங்கள் தேவையென்பதை இந்தியாவுக்குத் தெரிவித்துள் ளார் மஹிந்த.

13 பிளஸ் போன்று பல ஒளிவு மறைவான வாக்குறுதிகளை வழங்கிய பின்னராக இறுதியில் மேனன் ஊடாகத் தனது அரசு 13 ஆவது திருத் தத்திலும் குறைவானதான ஓர் தீர்வினையே எதிர் பார்ப்பதாக இந்திய அரசுக் குத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி.

இருந்த போதிலும் இந் தியாவின் விருப்பத்திற் கமைவாக 13 ஆவது திருத் தத்தை நடைமுறைப் படுத் தாவிட்டால் சர்வதேச சமூகத்தின் அழுத் தங் களை எதிர்கொள்ளும் சந் தர்ப்பங்களில் இந்தியா வின் ஆதரவை இழக்க நேரிடும் என்ற அச்சமும் இலங்கைக்கு இல்லாம லில்லை.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேர வையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா வால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் கடுமையை நீர்த்துப் போகச் செய்ததிலும் சரி, எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டினை இங்கு நடத்துவதற்கு வழி சமைத்துக் கொடுத்ததிலும் சரி, இந்தியா பெரும் பங்கு வகித்தது என்பது உலகறிந்த இரகசியம். இதனால் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டின்போது இந்தியா அதன் அதிருப்தியை வெளிப்படுத்து வதற்கோ அல்லது புறக்கணிப் பதற்காகோ எடுக்கும் எந்தவொரு நகர்வும் நிச்சயம் இலங்கை அரசுக்கு பாரதூரமானபின் விளைவுகளையே ஏற்படுத்து மென்பதும் யதார்த்தமானது.

## திடீர் முன்னேற்றம்

செப்ரெம்பரில் நடக்கவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் போதும் அதேபோன்று நவம்பரில் நடை பெற வுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட் டின் போதும் இந்தியாவின் ஒத்தாசையைப் பெறுவதற்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத் துக்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத் தையும் உறுதியான முன்னேற்ற வழியில் செயற் படுத்த வேண்டிய ஓர் அவசியம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரங்களாக ராஜபக்ஷ அரசு எடுத்து வரும் சில உறுதியான முன்னேற்ற நட வடிக்கைகள் இதனையே வெளிப்படுத்திக் காட்டு வனவாகவுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 53 இற்கும் அதிகமானவற்றை நடை முறைப்படுத்து வதற்கான செயற்திட்டத்தில் சேர்த்துக் கொள் வதற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அதன் விளைவாகவே 2006 இல் திரு கோணமலையில் இடம்பெற்ற மாணவர்களின் படுகொலை தொடர்பில் 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மூதூரில் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கொலை குறித்த விசாரணைகளும் முடுக்கி விடப்பட்டன.

ராஜபக்ஷ அரசின் மீதான இந்தியாவின் அழுத் தம் பெரும்பாலும் கட்டுப்படுத்த முடியாத தொன் றாகவே காணப்படுகின்றது. இதனாலேயே மாகாண சபைத் தேர்தல் மற்றும் 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக கோஷம் எழுப்பிய ஆளும் தரப்பு அணியைத் சேர்ந்தவர்கள் கூட இப் பொழுது சற்று அடக்கி வாசிக்கின்றனர்.

அதேவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரான ஆர்.சம்பந்தனை ஜனாதிபதி சந்தித்திருந்தார். இந்தச்சந்திப்பின் போது வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும், ஜனாதி பதியின் செயலாளரான லலித் வீரதுங்கவும் ஜனா திபதியுடன் கூடவிருந்துள்ளனர். அச்சமயத் தில் தேசியப் பிரச்சினை தொடர்பில் தீர்வு காணப் படாத சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப் பட வேண்டுமென்ற தனது விருப்பத் தினை சம் பந்தனிடம் ஜனாதிபதி தெரியப்படுத் தியுள்ளார்.

ஐக்கியமான பிரிவுபடாத நாட்டுக்குள் ஓர் ஏற்றுக் கொள்ளத்தக்கதானதும் அத்துடன் நலிவு றாமல் நீடித்து நிலைக்கக் கூடியதுமான படிமுறை வளர்ச்சியான அரசியல் தீர்வினைக் காண வேண்டு மென்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கும் கடப்பாடு உண்டு என்று இதன்போது சம்பந் தனும் ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இவ்வாறு எல்லாவற்றுக்கும் உலகநாடுகளுட னும், இந்தியாவுடனும் சண்டித்தனம் காட்டி வந்த இலங்கை, திடீரென தன்போக்கை மாற்றிக் கொண்டுள்ளது. தொடர்ச்சியான சர்வதேச மற்றும் இந்திய அழுத்தங்களாலேயே இவை நிகழ்ந்திருப் பினும் நாட்டின் நிரந்தரத்தீர்வுக்கு அரசின் இந்த அணுகுமுறை வித்திடுமானால், அதை நாட்டு மக்கள் ஆதரிக்கவே செய்வர். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14, ஓகஸ்ட் – 20, ஓகஸ்ட், 2013

sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# பாவம்! பள்ளிவாசல்களும் மக்களும்

எவ்வளவுதான் தீனி போட்டாலும் அதிகாரத்தின் பசி அடங்கப்போவதில்லை. அது சிறுபான்மை மீது தொடர்ந்தும் ஏதோ ஒருவகையில் தன் வேட்டைப்பற்களைப் பதியவைக்கவே முயலும் என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணமாக மாறியிருக்கிறது கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் குடியிருப்புகள் மீதான காடைக் கும்பலின் தாக்குதல். அண்மைக்காலமாக இலங்கையில் உள்ள பள்ளிவாசல்கள் மீதான தாகுதலின் தொடர்சியாகவே இந்தச்சம்பவமும் அரங்கேறியிருக்கிறது. வெலிவேரியா போன்று மோசமான விளைவுகள் ஏற்படலாமென்ற அச்சத்தில் அந்தப் பகுதியில் உடனடியாகவே ஊரடங்குச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. ஏனைய பள்ளிவாசல்களை மட்டுமன்றி, கிராண்ட்பாஸ் பள்ளிவாசலையும் தாக்கியவர்கள் யாரென்பது சின்னப்பிள்ளைக்குக் கூட தெரிந்த விடயம் தான். ஆனால் அவர்கள் மீது எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவேயில்லை. மாறாக அரசின் மறைமுக அனுசரணை தாக்கு தலாளிக்கு அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கிராண்ட்பாஸில் நிகழ்ந்ததொன்றும் தற்செயலான சம்பவமல்ல. நன்கு திட்டமிடப்பட்ட, பின்விளைவுகள் என்னவென்பதை ஊகித்துக் கொண்ட பின்னர் நடைபெற்றதே கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீதான தாக்குதல். கிட்டத்தட்ட நூறுக்கும் அதிகமானவர்கள் ஒரே இடத்தில் திரண்டு, முஸ்லிம்களின் வழிபாட்டிடம், வீடுகள் என்பவற்றைக் குறிவைத்து தாக்குவதைத் தற்செயலான சம்பவமென்று ஒதுக்கிவிட முடியாது.

முள்ளிவாய்க்காலோடு தமிழர்களின் கொட்டத்தை அடக்கியாயிற்று. இனி அவர்கள் அந்த வலியில் இருந்து மீளவே முடியாது. எனவே அடுத்த சிறுபான்மை இனமாக முஸ்லிம்களையும் இப்போதே ஒரு தட்டு தட்டி வைத்தால்தான் சரி என்ற பேரினவாதச் சிந்தனையின் வெளிப்பாடே பள்ளிவாசல்கள் மீது தொடரும் தாக்குதல்கள். இதனைத் தட்டிக் கேட்கவேண்டியது முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கடமை. ஆனால் அவர்கள் பதவி மோகத்தாலும் கதிரை ஆசைகளாலும் அரசை விமர்சிக்கவோ, முஸ்லிம் மக்களுக்கு நேரும் அநீதிகளைத் தட்டிக் கேட்கவோ திராணியற்றவர்களாக மாறிவிட்டனர். இதனால் அடுத்ததாக எந்தப்பள்ளிவாசல் தாக்கப்படப்போகிறதோ என்ற அச்சத்துடன்வாழும்நிலைமுஸ்லிம்மக்களுக்குஏற்பட்டுள்ளது.


யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதையே இன்னமும் சொல்லிச் சொல்லி தமிழாகளைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றிவரும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் நிகழ்காலத்தில் தம் கண்முன்னே நடக்கும் அக்கிரமங்களைக் காணாது போல பாசாங்கு செய்து வருவது அவர்களின் சுயநல அரசியலையே தோலுரித்துக்காட்டுகிறது.

இனி அடுத்த தேர்தல் வரும்போதுதான் அவர்களுக்கு தம்புள்ள முதல் கிராண்ட்பாஸ் வரையான பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்ட நினைப்பு வரும். அப்போது திடீர் ஞானோதயம் வந்தவர்கள் போல அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ள, அதை உண்மையென்று நம்பி மக்களும் வாக்களிப்பர். பின்னர் பழையபடி அரசுக்கான ஆதரவுக்கரம் அடுத்த தேர்தல் வரை நீளும். நாற்காலிகள் கிடைக்கும்.

பாவம் மக்கள்! தமது தலைவர்களை நம்பி, தம் பள்ளிவாசல்கள் ஒவ்வொன்றாக இடிபடுவதை பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

## யாழ்.கோட்டை: அடையாளமா? அவமானமா

■ பிரமன்



### அவமானத்தின் முதலாம் காலம்

யாழ்ப்பாணக் கோட்டை எப்போதுமே தமிழர்களின் சுயகௌரவத்துக்கு சவால் விடும் தோரணையோடுதான் வரலாற்றின் பக்கங்களில் குந்தியிருக்கிறது. தம்மைத்தாமே தமிழர்கள் ஆண்டு கொண்டிருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கோட்டை இருக்கவில்லை. போர்த்துக்கீசரின் உள்நுழைவோடுதான் இது உருப்பெற்றது. அதுவும் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் மனித வளத்தையும் உறிஞ்சியே , நகரின் கரையோராமாக மிகப்பிரமாண்டமாக இது எழுந்தது. யாழ்ப்பாணத்தை மட்டுமல்லாது இலங்கையின் கரையோரத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் தமது வியாபாரப் போட்டி நாடுகளின் படையெடுப்புகளைத் தடுப்பதற்கும் போர்த்துக்கீசருக்கு (இப்போதைய நெதர்லாந்துக் காரர்களே அப்போது போர்த்துக்கீசர் எனப்பட்டனர்) யாழ்கோட்டையின் உருவாக்கம் தேவைப்பட்டது.

போர்த்துக்கீசர்கள் வியாபாரத்தில் மிகக்கருமிகள். அஞ்சு பொன்னுக்கு குதிரையும் வேணும்: ஆறு கடக்கப் பாயவும் வேணும் என்னும் கோட்பாட்டினடிப் படையிலேயே அவர்களின் எல்லாச் செயற்பாடுகளும் இருந்தன. இலங்கையின் இரண்டாவது பெரிய -பிரமாண்டமான- கோட்டையை அமைக்கவும் வேண்டும். ஒரு சதம் கூட செலவும் இருக்கக்கூடாது. அதற்கும் போர்த்துக்கீசரிடம் வழி இருந்த து. மதத்தின் பேரால் யாழ்ப்பாணத்தில் கம்பீரமாக நிலைகொண்டிருந்த இந்து ஆலயங்கள் பலவும் இடிக்கப்பட்டன. அவற்றிலிருந்து கட்டடதேவைக்குரிய கற்கள் பெறப்பட்டன. தமிழர்கள் அடிமைகளாகப் பிடிக்கப்பட்டார்கள். அல்லது அரச உத்தரவின் பேரில் கட்டாய ராஜசேவை செய்யவேண்டும் என்று பணிக்கப்பட்டனர். இவ்வாறு கட்டாய சேவைக்குள் கொண்டுவரப்பட்டவர்கள் இடிக்கப்பட்ட ஆலயங்களில் இருந்து, கோட்டை இப்போதுள்ள இடம் வரை வரிசையாக மனிதச்சங்கிலியாக நின்றனர். அவர்கள் கற்கள், கட்டடப்பொருள்கள் என்பவற்றை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு தொடராகக் கையளித்து எல்லாப்பொருள்களையும் யாழ் நகரத்துக்குள் குவித்தார்கள். பின்னர் அவர்களை வைத்தே இராட்சதக் கோட்டை நகரில் கட்டுவிக்கப்பட்டது. எங்கள் தேசத்து மனிதர்களின் குருதியையும், வியர்வையையும், வாழ்வையும், பண்பாட்டையும் விழுங்கிக் கொண்டபடி திமிரோடு 1619 இல் எழுந்தது யாழ்ப்பாணத்துக் கோட்டை.

அதன்பின்னர் யாழ்ப்பாணம் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று வெவ்வேறான நாடுகளைச் சேர்ந்தவர்களிடம் அகப்பட்டபோதும் ,அது அந்தந்த அதிகாரம் சார்ந்தவர்களின் சின்னமாகவே விளங்கியது. இடையிடையே தமக்கு எதிரானவர்களை நகர் முழுதும் தெரியும்படி கோட்டையின் மேற்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த தூக்குமேடையில் பிணமாக ஆட்சியாளர்கள் நாள்கணக்கில் தொங்க விட்டகதைகளுமுண்டு. அதனால் கோட்டை என்றாலே எல்லோருக்கும் மரணபயம் அவர்களையுமறியாமல் ஏற்படத்தொடங்கியது. ஐங்கோணவடிவில் எப்போதும் தமிழர்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலோடுதான் கோட்டை நின்றிருந்தது. அவமானத்தாலும் , பயத்தாலும் அந்தக்காலத்தில் கோட்டையினருகே வரும் யாழ்ப்பாணத்தவர்களின் தலைகள் தானாகவே தாழ்ந்து கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்.கோட்டை:

# அடையாளமா அவமானமா?

## எங்களின் காலம்

**கா**லங்களின் உருண்டோடுகையில் இலங்கையின் ஆட்சி மாற்றமும் நிகழவே செய்தது. 300 வருடங்களுக்கு மேலாக போர்த்துகேயர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் என வேற்று நாட்டவர்களின் அதிகார மையமாக யாழ்ப்பாணத்தில் நிமிர்ந்து நின்ற கோட்டை இலங்கையில் சுதந்திரத்தோடு சிங்களப்படைகளின் கைகளுக்குள் சென்றது. ஆட்சி மாறியபோதும் தொடர்ந்தும் தமிழர்களுக்கு ஒரு அடிமைச்சின்னமாகவே 90 கள் வரை கோட்டை இளித்து கொண்டு இருந்தது. ஆனாலும் 80களில் முளைவிட்ட தமிழர் விடுதலைப் போராட்டம் கூட கோட்டையை அகற்றுவதில் தான் முனைப்பாக இருந்தது. வெவ்வேறு பெயர்களுடன் தமிழ் மக்களின் உரிமைக்காக போராட கிளம்பிய போராளிக்குழுக்கள் அனைத்தும் கோட்டைக்குள் இருந்த படையினரை முடக்குவதில் ஒரே எண்ணப்பாட்டுடன் இருந்தார்கள்.

இதனால் பங்குபிரித்து காவலரண் அமைத்து படைகளை கோட்டைக்குள்ளேயே சிறைவைத்தார்கள். படைகளுக்கான விநியோகம் வானையும் கடலையும் நம்பியே இருந்தது. பின்னர் இந்திய இராணுவத்தின் வருகையின்போது அவர்களின் கூடாரமாகவும் யாழ்.கோட்டையே விளங்கியது. யாரெல்லாம் தமிழர்களை அடக்கவும் ஒடுக்கவும் வருகிறார்களோ அவர்களுக்கெல்லாம் அடைக்கலம் கொடுப்பதுதான் கோட்டையின் பரம்பரைத் தொழிலாக இருந்தது. இதனால் எப்படியும் தமிழரின் காலடிக்குள் அதனைக் கொண்டு வரவேண்டும் என்று ஒவ்வொரு போராளியும் துடித்துக்கொண்டிருந்தான்.

இந்திய இராணுவத்தின் வெளியேறுகையோடு மீண்டும் இலங்கைப் படைகளின் கைகளுக்குள் கோட்டை சென்றது. அடுத்த கட்ட ஈழப்போர் வெடிக்க கோட்டையை முற்றுகையிட்டார்கள் புலிகள். கோட்டைக்கான சகலவழிகளும் அடைக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் விமானங்களின் ஊடாக வரும் பொருள்களையே கோட்டைக்குள் இருந்த படைகள் நம்பியிருக்க வேண்டியிருந்தது. ஆயினும் முற்றுகையிட்டிருந்த புலிகளை தாக்கவென வந்த சியாமாச்செட்டி (பொம்மர்) விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட, வான்வெளி விநியோகமும் அந்தரத்தில் ஆடத் தொடங்கியது. புலிகளின் சூட்டெல்லைக்கு எட்டாத உயரத்தில் வட்டமிடும் வல்லூறுகள் போட்டுவிட்டுப்போகும் பொதிகளில் அநேகமானவை கோட்டைக்குள் வீழ்ந்ததைவிட பண்ணைக் கடலுக்குள்ளேயே கொட்டுண்டன. உணவுமின்றி வெடிபொருள்களுமின்றித் தடுமாறிய படைகள் புலிகளிடம் சிக்கி அழிவதைவிட தப்பித்தோடுவதே சிறந்த தெரிவாக நினைத்தனர். ஒருநாள் இரவு, கடற்பாதையூடாக சொல்லாமல் கொள்ளாமல் ஓடியும் விட்டார்கள். அவர்கள் ஓடிய நாள் உண்ணாநோன்பிருந்து உயிர்நீர்த்த திலீபனின் நினைவுநாள். கோட்டையில் புலிக்கொடி பறக்கவேண்டுமென்று அதிகம் ஆசைப்பட்டவன் திலீபன். அவனின் நினைவுதினத்தில் அடிமைத் தளையின் அவமானச் சின்னமான கோட்டையில் தமிழர்களின் புலிக்கொடி பறக்க விடப்பட்டது. அது எங்களின் காலம். அத்தனை நாளும் குனிந்திருந்த தலைகள் நிமிர்ந்து பெருமிதத்தோடு புலிக்கொடியைப் பார்த்துக் கொண்டன. 300 வருடங்களாக அவமானச் சின்னமாக இருந்த கோட்டை, அன்றுமுதல் வெற்றிச் சின்னமாக மாறியது. என்றாலும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் மீண்டும் அதிகாரத்தின் கைகளில் கோட்டை வீழ்ந்துவிடக்கூடும் என்ற ஊகிப்பில் அதனை இடித்துத் தள்ள முடிவெடுக்கப்பட்டது. உள்ளிருந்த கட்டடங்கள் அனைத்தும் முற்றாகச் சிதைக்கப்பட்ட போது வெளிப்புறக் கட்டுமானம் அப்படியேதானிருந்தது. ஏனெனில் தீவகப் பகுதியிலிருந்த படையினரைக் கட்டுப்படுத்த புலிகளுக்கும் கோட்டை தேவையாக இருந்தது. மண்டைதீவில் நடத்தப்பட்ட வெற்றிகரமான தாக்குதலை யாழ்.கோட்டையில் இருந்தபடியேதான் புலிகளின் தலைவர் பிரபாகரன் வழிநடத்தியிருந்தார். என்றாலும் 1995இல் மீண்டும் கோட்டை பேரினப்படைகளின் கூடாரமாக மாறியது.

## அவமானத்தின் இரண்டாம் காலம்

**போர்** முடிந்தபின்னர் கோட்டையை உருவாக்கிய நெதர்லாந்துக் காரர்கள், தமது இருப்பின் அடையாளமாக இதனை மாற்ற முடிவெடுத்தார்கள். அருகில் இருந்த நெதர்லாந்துக் கட்டுமானப் பாணியில் இருந்த வீடுகளையும் கண்டறிந்து அவற்றை வாங்கி, நெதர்லாந்துக் குடியிருப்பொன்றை அமைக்கவும் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனாலும் அது கைகூடவில்லை. இந்நிலையில் நெதர்லாந்து அரசின் உதவியோடு கோட்டை புனரமைப்பு ஆரம்பமானது. ஆனால் இப்போதுதான் இன்னொருவகையான அவமானச் சின்னமாக அது மாறத்தொடங்கியது. ஆளரவமற்ற பகுதி, நகருக்கு அண்மையான அதுவும் போக்குவரத்து வசதிநிறைந்த மறைவிடம் என்பனவெல்லாம் காதலர்களுக்கும், இன்னும் பாலியல் தேவைகொண்டவர்களுக்கும் கோட்டையை சொர்க்கபுரிபோல் தென்படவைத்தது.

மாலைக் கருக்கலில் வரும் சோடிகள் குடைமறைவில் தமது அந்தரங்க ஆசைகளை அரங்கேற்றும் இடமாக கோட்டை வளர்ச்சி பெற்றது. படைச் சிப்பாய்களும் தமிழ்யுவதிகளை இங்கு அழைத்த வருவதாக நம்பத்தகுந்தவர்கள் சொல்கிறார்கள். கலாசாரச் சீரழிவின் மையமாக கோட்டை மாறியதால், அவசர அவசரமாத் தனியார் துறையினரின் பாதுகாப்புப் போடப்பட்டது. இதன் பின்னர் பாலியல் இணைகளின் வரவு கொஞ்சம் குறைந்தே இருக்கிறது. ஆயினும் பாதுகாப்புக் கடமைகளில் இருப்பவர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, ஏதோவொரு மறைவான இடத்தைக் கண்டுபிடித்து ‘களி நடனம்’ செய்யும் கில்லாடிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

யாழ்.கோட்டைக்குள் பொதுவாக சுற்றுலாப் பயணிகள் தவிர்ந்த வேறெவரும் செல்வது குறைவு. இதனால் தமக்குத் தெரிந்தவர்கள் கண்டு விடுவார்களோ என்ற பயம் இங்குவரும் சோடிகளுக்குக் கிடையாது. இதனாலேயே பெண்களும் துணிந்து தமது காதலர்களோடு இங்கு தயக்கமின்றி வருகிறார்கள். உள்ளூர்க்காரர்களுக்குப் போட்டியாகச் சுற்றுலாப் பயணிகளும் சில சமயங்களில் சல்லாபங்களில் ஈடுபட்ட சம்பவங்களும் நடந்ததுண்டு.

ஒரு காலத்தில் உள்ளே காலை வைக்கவே நடுக்கத்தை ஏற்படுத்திய கோட்டை, இன்று தன்னைப் பார்த்து எல்லோரையும் காறித்துப்ப வைக்கும் அளவுக்கு பாலியல் களியாட்டங்களுக்கு இடம் கொடுத்து வருகின்றது. “துரையப்பா ஸ்ரேடியத்தில ஆமிக்காரர் புரோக்கிறாம் வைக்கிறவங்கள். அப்பவெல்லாம் கோட்டைக்கைதான் பொம்பிளப்பிள்ளையளைக் கூட்டிக்கொண்டு போறவங்கள்” என்று ஒரு தகவலை காதில் போடுகிறார் அப்பகுதியைச் சேர்ந்த நடுத்தர வயதுடைய ஒருவர். காலங்கள் கரைந்தோடிப் போனாலும் ஏதோவொருவகையில் தமிழர்களுக்கு அவமானத்தை ஏற்படுத்தியே தீருவது என்ற கங்கணத்தோடுதான் இன்னமும் இருக்கிறது யாழ்ப்பாணத்துக் கோட்டை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சிறுகதை —

# சிதறுமனம்

செல்வி வேலாயுதம் ஸ்ரீதயாபரி



கனகா ! கனகா என்று கூப்பிட்டுக் கொண்டு பாயைச் சுருட்டும் இராமையா பிள்ளைகள் இண்டைக்கு பள்ளிக்கூடம் போகேல்லையே நேரமும் ஐஞ்சு மணி ஆச்சுது என்று கேட்டுக் கொண்டு வெளியே செல்ல ம், ம் அதுகள் போகுதுகள் என்று கூறும் கனாகாவின் இனிய ஒலியும் சாம்பிறாணிப்புகையின் வாசமும் ராஜா, ராயூ, சீதா மூவரையும் தூக்கத்தினின்றும் எழுப்பியது. அம்மா நெடுகிலும் இப்படித்தான் என்று முணுமுணுத்துக் கொண்டு சீதா எழும்பி காலைக்கடன்களை முடித்து வருவதற்குள் தேநீர் தயாராகிக் காத்திருந்தது. தேநீரை பருகுவதற்கு கையில் எடுக்கும் போது அப்பாவும் வந்துவிட்டார். எல்லோரும் சேர்ந்து தேநீர் பருகினர்.

அப்பா தேநீர் பருகும் போது பிள்ளைகள் நீங்கள் கவனமாகப் படிக்க வேண்டும், படிப்புக்காக எது வேண்டுமானாலும் நான் செய்வேன். நீங்கள் ஒழுங்காகக் கல்வி கற்க வேண்டும் என்று கூற மூவரும் ஏற்றுக் கொள்பவர் போல் தலையசைத்தனர். நானும் வயலிற்குப் போகிறேன்.

இராமையா, தோளிலே மண் வெட்டியை வைத்துக் கொண்டு போக பிள்ளைகளும் பாடசாலைக்கு செல்ல ஆயத்தமாகினர். தாயார், பிள்ளைகளிற்கு சாப்பாட்டினைக் கொடுத்து அனுப்பினாள். ராஜா, மனதில் அம்மா எப்படி இவ்வேலைகளை செய்கிறார் என்ற எண்ணம்.

“ எவ்வளவு சந்தோஷம்.
அப்பாடா இத்தகைய எண்ணங்களுடன் கரனுடன் சேர்ந்து வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் தீய பழக்கத்திற்கு ராஜா உள்ளாகிவிட்டான்.
ராஜாவால் அப் பழக்கங்களில் இருந்து விடுபட முடியவில்லை என்பதை நினைத்து பெற்றோரும், சகோதரர்களும் மனம் வருந்தினர். ”

ஓய்வில்லாதவள் போல் கனகா காலைச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்றாள். கணவனுக்கு அன்புடன் உணவு பரிமாறினாள். சரியப்பா பதினொரு மணியாச்சுது இனி பிள்ளையள் வரப்போகுதுகள் நான் சமைக்க வேணும் என்று கூறிக் கொண்டு காலில் சில்லுப் பூட்டியவள் போல் வீட்டிற்கு வந்தாள்.

ஐந்து நிமிடம் ஆறுதல் கிடைக்குமோ என்று ஏங்கிய நிலையில் இருக்க பக்கத்து வீட்டு லீலா கனகாக்கா, கனகாக்கா என கூப்பிடும் சத்தம் கேட்டது. கையில் வேலையுடன் வாங்கோ, வாங்கோ, என்ன இந்த நேரம் சும்மா வந்தனான் அக்கா என்றாள் லீலா. அக்கா உங்களிற்கு ஒரு புதினம் தெரியுமே. உங்கட வீட்டிற்கு பக்கத்திலே ஆரோ குடிவரப் போகினமாம். அவையள் பெரிய பணக்காரராம் ஏதோ 'பிஸ்நஸ்மானாம்' இரண்டு பிள்ளையள் வெளியில, இரண்டு பிள்ளையன் இங்க இருக்கினமாம். அதுக்கென்ன அதுகள் இருந்திட்டு போகட்டுமென். இஞ்சபாருங்கோ. கனகாக்கா அதுகளும் அதுகளின் பழக்க வழக்கங்களும் சரியில்லையாம். நீங்களும் உங்கட பிள்ளைகளும், கவனமாக அதுகளோடு பழகுங்கோ எனக்கு தெரிந்ததை சொல்லீட்டன் சரி அக்கா நான் வாறன், சரி போய் வா என்றான் கனகா தளுதளுத்த குரலுடன் கூறிக் கொண்டு மதிய சமையலில் ஈடுபட்டாள். கை வேலை செய்தாலும் லீலா கூறியதே நினைவுக்கு வந்தது.

நேரமும் இரண்டு மணியாச்சுது. பிள்ளைகள் வரப் போகினம் என்று நினைக்கும் போதே ஆலமரத்தடியில் அவர்களின் சத்தம் கேட்டது. அவசர அவசரமாக தட்டுகளில் உணவினை ஆறப் போட்டாள். ராயூவும் சீதாவும் புத்தகப்பையை கழற்றி வைக்கும் போதே இருவருக்கும் இடையில் வாக்குவாதம் நிகழ்ந்தது. ராஜா, ராஜா என்ன சத்தம் தாயார் கேட்க அது தம்பியும், தங்கையும் சண்டை பிடிக்கினம். நான் சொல்ல கேட்கினம் இல்லை. அம்மா, மாறி மாறி சண்டை பிடிக்கினம். அம்மாவின் குரல் கேட்டதும் இருவரும் அமைதியாகினர். அம்மா சீதா என்ன பிரச்சினை முதலில் சொல்லு. அம்மா நான் உறுப்பெழுத்தில் பாடசாலை மட்டத்தில் முதல் இடம், என்னை எல்லோரும் பாராட்டினார்கள், பரிசும் தந்தார்கள். அம்மா இதைச் சொல்ல தம்பி, இல்லை என்று சொல்லுகிறான். அம்மா, என்றாள் சீதா அழுகையுடன் அடடா; இதுவா பிரச்சினை வாருங்கள் சாப்பிட என்று மூவரையும் அழைத்து சாப்பாடு பரிமாறினாள். ராஜா, ராஜா சாப்பிட்டுவிட்டு அப்பாவிற்கு உணவை கொடுத்து விட்டு வா, என்று அனுப்பி விட்டு தானும் உணவை உண்டுவிட்டு ஒய்வு கிடைத்தவள் போல திண்ணையில் அமர்ந்தன, ராயுவும், சீதாவும் பாடவேலைகளை தாயாருக்கு காட்டினார்கள் ராஜா தந்தைக்கு வேண்டிய உதவிகளை செய்துவிட்டு வீட்டிற்கு வந்து பாடங்களை படித்தாள். அம்மா தான் தான் முதலாம்பிள்ளை ராஜா கூற தயார் மிக்க மகிழ்ச்சியுடன் நன்றாகப் படிக்க வேண்டும் மகிழ்ச்சியின் பூரிப்பில்...

மனதிலே சந்தோஷம் என்றாலும் லீலா கூறியது ஞாபகத்திற்கு வந்தது. என்ன நடக்குமோ தெரியாது என்றாள் பெருமூச்சுடன் சிறிது நேரத்தில் பெரும் இரைச்சலுடன் வாகனம் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து நான்கு பேர் இறங்கினர். அவர்களின் கையில் ஏதோ புகைவதைப் பார்த்து, தம்பி ராஜா அவையளின்ர கையில் ஏதோ வெள்ளையாய் புகையுது அது என்ன தம்பி, எனக்கு தெரியேல்லை அம்மா என்று அவர்களைப் பார்த்த வண்ணம் பதில் அளித்தாள் ராஜா

மாதங்கள் உருண்டோடின. இரு குடும்பங்களும் நெருக்கமாக பழகிக் கொண்டன. தாயின் பிள்ளைகளும், இராமையாவின் பிள்ளைகளும் பாகுபாடின்றி அன்புடன் பழகிக் கொண்டார்கள் ஆனால் தாயின் குடும்பத்தின் பழக்க வழக்கங்களைப் பார்க்க இவர்களிற்கு வியப்பாக இருந்தது. மதுபானம் அருந்துதல், புகைப்பிடித்தல், படம் பார்த்தல், பவுடர் பாவித்தல் போன்ற பழக்க வழக்கங்களைப் பார்க்க இவர்களிற்கு வியப்பாக இருந்தது மதுபானம் அருந்துதல், புகைப்பிடித்தல், படம் பார்த்தல், பவுடர் பாவித்தல் போன்ற பழக்கவழக்கங்களை ராஜாவும், கரனுடன் சேர்ந்து வீட்டிற்கு தெரியாமல் பழக ஆரம்பித்து விட்டான்.

தனது பிள்ளைகளில் மாற்றங்கள் தெரிவதை கனகா உணர்ந்தாள். ராயூ ரெலிபோன் வாங்கித் தரும்படி சண்டை பிடித்ததும், ராஜா பாடசாலை செல்வதில் பின்னடிப்பு, வீட்டு வேலைகள் செய்வதில்லை. பொய் பேசி பணம் வாங்குதல், கரனில் வீட்டில் தங்குதல் இதனால் மனம் வருந்தினாள், கணவரிடம் கூறி அழுதாள்.

ராஜாவின் மனதில் பல எண்ணங்கள் புரண்டோடின. கரன் என்னைப் போன்ற மாணவன் தானே.

அவனின் ஜாலி என்ன, நிறையப்பணம், தாய் தகப்பன் தண்டிப்பதில்லை, எவ்வளவு சந்தோஷம் அப்பாடா இத்தகைய எண்ணங்களுடன் கரனுடன் சேர்ந்து வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் தீய பழக்கத்திற்கு ராஜா உள்ளாகிவிட்டான். ராஜாவால் அப் பழக்கங்களில் இருந்து விடுபட முடியவில்லை என்பதை நினைத்து பெற்றோரும், சகோதரர்களும் மனம் வருந்தினர்.

மகனின் துன்பத்தை உணர்ந்த தகப்பனார், ராஜாவை வற்புறுத்தலின் பேரில் கூட்டிச் சென்று ஆலமர நிழலில் அமர்ந்து புத்திமதி கூறினார். கெட்ட பழக்கங்களில் ஈடுபடாதே, எமது குடும்பத்தை காப்பாற்ற வேண்டும், என்று அழுது அழுது கூற ராஜாவால், ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அந்த நேரத்தில் கரன், ராஜா ராஜா என கூப்பிடும் சத்தம் கேட்க ராஜா தன் நினைவு மறந்தவனாக எழுந்து செல்கின்றான். இருவரும் தோளிலே கைபோட்டுக் கொண்டு மோட்டார் வண்டியில் செல்கின்றனர்.

ஆலமரமே என் அறிவுரைகளை நீயே கேள் என மனதை தேற்றுகிறார். இராமையா கடவுளே எத்தனை துன்பங்கள், துயரங்கள் அந்நிய மோகத்தாலும், அந்நிய பணத்தாலும், அந்நிய கலாச்சாரத்தாலும் எத்தனையோ குடும்பங்கள், இளைஞர்கள், யுவதிகள் நிலை தடுமாறிப் போகின்றனர். ஆலமரம் இராமையாவின் உரையைக் கேட்பது போல தன் கிளையை அசைத்தது. இராமையாவும் அதிலே தலை சாய்கிறார். அனைத்து ஒலிகளும் அடங்கியது. ராஜாவோ நிலையில்லாத நிலையில் நீந்துகின்றாள். அவர்களின் துன்பக்கடலில் சேர்ந்து நீந்த யாருளர், யாருளர், யாருளர்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவானில் கைவிட்ட பரசூட்



(சென்ற வாரத் தொடர்ச்சி)

இதனிடையில் ஜோனிக்கு பரசூட்டை விரியச் செய்வதற்காக அணிந்திருந்த பரசூட்டை அவனது மார்பில் அமைந்திருந்த விசையை அழுத்தப் போவ தாக தனது கைச்சைகையால் காட்டிய சார்ள்ஸ் மறு கனமே தனது கைவிரல்களினால் சுவிட்சை அழுத் தினான்.

தடாலெனப் பரசூட் விரியத் தொடங்கிற்று ஆனால் அந்தரத்தில் வான் வெளியில் மிதக்கும் சார்ள்ஸி னால் அங்கு நடப்பவற்றை அறிந்து கொள்ள சந் தர்ப்பம் எதுவும் கிட்டவில்லை. அவன் மேலே அண் ணார்ந்து பார்க்கையில் விரிந்து கிடக்கும் அவனது பரசூட்டின் உட்புறமும் கீழே பார்க்கையில் 2000 அடிக்குக் கீழே காணப்பட்ட தரைப்பகுதியின் மங்க லான தோற்றமும் அவன் பார்வையில் பட்டன.

ஆயினும் அந்நிலையிலும் அவனால் ஒன்றினை மட்டும் ஊகிக்க முடிந்தது. பரசூட் விரிந்து கொண் டதே தவிர அதன் மூலமாக தன்னால் தரையை நோக்கிக் கீழே இறங்க முடியவில்லையென்பதனை உணர்ந்து கொண்டான். அதே போன்று ஏதோ ஓர் விசையினால் விமானத்தின் பறப்பு வேகத்திற்கேற்ப தான் விமா னத்துடன் சேர்ந்து இழுத்துச் செல்லப் படுவதையும் அவனால் நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது.

அடுத்த கணம் விமானத்துடன் பரசூட்டினை இணைத்திருந்த கேபிளின் ஞாபகம் அவன் நினை வில் பொறி தட்டியது . பரசூட்டை விரியச் செய்யும் விசையை அழுத்தியதுமே பரசூட் விரிய அதே சமயத்தில் விமானத்துடனான கேபிள் இணைப்பும் தானாகவே விடுபட வேண்டுமென பயிற்சியாளர் ஜோன் பயிற்சி வகுப்புகளின் போது கூறியிருந்தமை அவன் நினைவில் அலை மோதியது.

அவனுக்கு எல்லாமே நன்கு புரிந்து விட்டது. கேபிள் இணைப்புக் கழன்று விடு படவுமில்லை. தரையை நோக்கிக் கீழே இறங்கப் போவதுமில்லை. இப்படியே விமானத்துடன் சேர்ந்து இழுபட்டுக் கொண்டிருக்க வேண் டியது தான். பரசூட்டின் பெல்ட் டைக் கழற்றி விடுவதன் மூலம் சார்ள்ஸ் பரசூட்டின் பிணைப்பி லிருந்து அகன்று விடமுடியும். ஆனால் பரசூட்டின் உதவி எதுவு மின்றி அவ்வளவு உயரத்தில் இருந்து கிலே தரை யில் விழுவானேயாகில் சார்ள்ஸின் உடல் சிதறியே விடும். நினைக்கவே அவனுக்குத் தலையைச் சுற் றியது.

மனதால் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்ட அதே வேளையில் ஒரு கணம் அவனது பெற்றோரையும் இரு சகோதரிகளையும் மனதினில் எண்ணி ஏங்கினான் சார்ள்ஸ்.

விமானத்தின் கபினில் இருந்த பைலட் டானியல் தரையிலுள்ள தனது விமான நிறுவனத்தின் கட்டுப் பாட்டுப் பகுதிக்கு நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் குறித்து தகவல் அனுப்பிக் கொண்டேயிருந்தார். அவரின் அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த பயிற்சியாளர் ஜோன் பதற்றமடைந்த நிலையில் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

நேரம் தன் பாட்டில் நகர்ந்து கொண்டிருந்தது. பரசூட் விரிந்த நேரத்திலிருந்து கிட்டத் தட்ட ஒரு மணித்தியாலமாகி விட்டது. காற்றின் வேகமும் அதிகரித்துக் காணப்பட்டது. விமானத்திலும் எரி பொருள் குறைந்து வந்து கொண்டிருந்தது. தாங்கியில் இருக்கும் எரிபொருளின் அளவுக்கு இன்னமும் அரைமணித்தியாலத்துக்கு மேலே தாக்குப் பிடிக்க முடியாது எதுவிதத்திலும் விமானத்தை அரைமணித் தியாலத்திற்குள் தரையிறக்கியே ஆக வேண்டும்.

இச்சமயத்தில் காற்றின் வேகத்திலும் விமானத்தின் பறப்பு வேகத்தாலும் அங்கிமிங்குமாக இழுபட்டு அலக்களிக்கப்பட்ட பரசூட்டிற்கும் விமானத்துக்குமான இணைப்பிலிருந்து அறுந்து கொண்டதுடன் பரசூட் டின் மேற்பரப்பில் வீழ்ந்து மோதியதால் பரசூட்டின் மெழுகு போன்ற துணியில் பெரியதான கிழிசலையும் ஏற்படுத்தி விட்டது.

ஏற்பட்ட கிழிசனால் பரசூட்டின் வழமையான செயற்பாட்டினை இழந்த நிலையில் செயலற்ற வகையில் திடீரென வேகமாகத் தரையை நோக்கி சார்ள்சுடன் கீழே இறங்கத் தொடங்கிற்று. அச் சமயத்தில் தான் பரசூட் கிளப்பின் அங்கத்தவர்களில் ஒருவரான பியரியோம் வான்பரப்பில் ஏதோ துணி படபடப்பது போன்ற வித்தியாசமான சத்தம் எழுவதைக் கேட்டு அண்ணார்ந்து பார்த்தான்.

> “ உதவிக்குரல் கேட்டு ஓடிவந்தவர்களும் பியரியோமும் சம்பவ இடத்திற்கு வந்து சேரவும், சார்ள்ஸ் கிழிவடைந்த நிலையில் சேதமடைந்திருந்த பரசூட்டுடன் வேகமாகத் தலையில் மோதி விழவும் சரியாக இருந்தது. ”

மாலை நேரம் அண்மித்துக் கொண்டிருந்தமையால் அவனால் வான் பரப்பில் எதனையும் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. இருந்த போதிலும் ஏதோ ஒரு உருவம் தரையை நோக்கி வெகு வேகமாக கீழே விழுந்து கொண்டிருப்பதை அவனால் கண்டு கொள்ள முடிந்தது.

அத்துடன் நிச்சயமாக விமானத்திலிருந்து பரசூட்டில் குதித்தவர்களில் ஒருவனாக இருக்க வேண்டுமென்பது அவன் மூளையில் தட்டியது.

கிளப்பின் மைதானத்தில் அங்கும் இங்குமாகச் சிலர் உடற்பயிற்சியிலும், விளையாட்டுக்களிலும் ஈடுபட்டிருந்தனர். என்னசெய்வதென்றறியாத நிலை யில் பியரியோம் உரத்தகுரலில் உதவி கோரிய வண்ணம் வானில் உருவம் விழுந்து கொண்டிருந்த இடத்தை நோக்கி மிக விரைவாகப் பாய்ந்தோடினான்.

உதவிக்குரல் கேட்டு ஓடிவந்தவர்களும் பியரி யோமும் சம்பவ இடத்திற்கு வந்து சேரவும், சார்ள்ஸ் கிழிவடைந்த நிலையில் சேதமடைந்திருந்த பரசூட்டு டன் வேகமாகத் தலையில் மோதி விழவும் சரியாக இருந்தது.

தரையில் மோதி விழுந்த சார்ள்ஸ் அலங்கோல மான நிலையில் மூர்ச்சயடைந்து விட்டான். அங்கிருந் தவர்கள் அவன் உடலில் இருந்து பரசூட்டின் பெல்ட்டைக் கழட்டி அதனின்றும் அவனது உடலை விடுவித்தான்.

தலையிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண் டிருந்தது. இரத்தப் பெருக்கினைக் கட்டுப்படுத்து வதற்குக் தலையில் கட்டுப் போடப்பட்டது . எலும்பு முறிவு உடலின் பல பாகங்களிலும் ஏற்பட்டிருக்கும். மருத்துவமனைக்கு விரைந்து கொண்டு செல் லப்பட்டான்.

அவனைப் பரிசோதனை செய்த வைத்திய நிபுணர்கள் முதலில் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையலிட்டுக் கட்டுப் போட்டு இரத்தப் போக்கினை நிறுத்தி விட்டு அவனின் உடலை நன்கு பரிசோதித்தனர்.

எடுக்கப்பட்ட எக்ஸ்றே படங்களின் மூலமாக அவனது கை, கால் மற்றும் முள்ளந்தண்டு என்பவற்றின் எலும்புகளில் பல இடங்களில் முறிவுறுகளும் சிறுசிறு வெடிப்புகளும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

எலும்பு முறிவுகளுக்குரிய சிகிச்சைகள் அளிக் கப்பட்டன. இருந்த போதிலும் உடல் நிலை குண மாகினாலும் அவனால் மறுபடியும் இயல்பாக எழுந்து நடமாட முடியுமா? என்பது சந்தேகத்திற் கிடமாக வுள்ளதாகவே மருத்துவ நிபுணர்கள் கருதினர்.

மூன்று மாதங்களாக மருத்துவமனையின் படுக் கையில் வைத்து சார்ள்ஸ்சுக்கு சிகிச்சையளிக்கப் பட்டது. எலும்பு முறிவுகள் வெடிப்புகள் யாவும் முற்றிலுமாக குணமடைந்துவிட்டன.

எனினும் அவனது முதுகின் முள்ளந்தண்டில் ஏற்பட்ட குறைபாட்டினால் அவனால் நிமிர்ந்து உட்காரவோ அல்லது நடக்கவோ முடியாது. அவனது பெற்றோர்கள் வேறு பல சிறந்த மருத்துவ நிபுணர் களிடம் காட்டியும் பயன் எதுவும் கிடைக்கவில்லை. மருத்துவ நிபுணர்களைப் பொறுத்தமட்டில் அவன் 2000 அடி உயரத்திலிருந்து இவ்விதமாக தரையில் விழுந்து உயிர் தப்பி வாழ்வதே அதிசயமாக இருந்தது. சார்ள்ஸின் வாழ்வில் விளையாட்டு வினையாகி விட்டது.

(முற்றும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை



தொடர் கதை

04

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

"உன்ரை பிள்ளைக்கும் மருமகளுக்கும் இங்க வர ஏலாமல் கிடக்கு. நீ விசரி அவையின்ரை படங்களை பார்த்துக் கொண்டு நிக்கிறாய்."

மனுசி அத்துடன் பேச்சை நிறுத்திக் கொண்டாள். எனக்கு மேலும் கொஞ்சம் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

"முந்த நாள் ரவுணுக்குப் போகேக்க பார்த்தன். எங்க பார்த்த தாலும் ரோட்டு முழுக்க கையஸ் வான் தான். வாற ஆக்களும் போற ஆக்களும் அப்பப்பா கடைப்பக்கமும் போகேலாது... சாப்பாட்டுக் கடைக்குப் போனால் கூட்டம். கூல்வாறுக்குப்போனால் கூட்டம். எவ்வளவு ஆவலாய் சனம் வந்து போகுது. எனது புலம்பல் நிற்க வீடு அமைதியானது. எதுவும் இப்போது அமைதியாக இருந்தது. சந்தியில் உள்ள துரை அண்ணையின் மரக்காலையிலிருந்து மெசின் சத்தம் வரவில்லை. வேலையாட்கள் மதியச்சாப்பாட்டுக்கு வீடு போய்விட்டார்கள். வெய்யில் உக்கிரமாகி அனல் அடித்தது. பெத்தம்மா கிழவி யாரையோ திட்டியபடி நடந்து போனாள். மனுசி வீட்டு மூலையில் படுத்துக் கிடந்தாள்.

சாப்பிடுவது வரை பேச்சுவார்த்தை முறுகல் நிலை புரிந்துணர்வு போர் நிறுத்தம் படுக்கை தற்பாதுகாப்பு யுத்தம் இப்படித்தான் எங்கள் வாழ்க்கை போய் கொண்டிருந்தது.

மனது பழையதை நினைவூட்டியது. இரை மீட்டியது. யாழ் கண்டி பிரதான வீதி திறக்க முன் மின்சாரம் ஊருக்கு வரும் முன் கப்பலும் விமானமும் இடையிடையே ஓடியபோது இங்கு ஊருக்கு வந்த முதலாவது வெளிநாட்டுப்பயணியின் வருகை எப்படியிருந்தது.?

காலையில் இருந்து சுந்தரம் இண்டைக்கு டோகாவில் இருந்து வாறார் எண்ட செய்தி காதில் விழுந்து கொண்டிருந்தது. சுந்தரத்தின் இரு புதல்வர்களும் பரபரப்புடன் சைக்கிளில் போய்க் கொண்டிருந் தார்கள். கடையடி சந்தை வாசிகசாலை போனால் இதே கதை தான்.

1988 இல் கட்டுவனில் இருந்து ஆமிக்காரங்கள் வாறாங்கள் என்ற செய்தி வந்த நிலைமை போல தான். டோகாவில் இருந்து சுந்தரம் வாறாராம்! டோகாவில் இருந்து சுந்தரம் வாறாராம்.!

எனக்கு இருக்க முடியவில்லை. நான் பார்க்கும் போதெல்லாம் சுந்தரத்தின் புதல்வர்கள் நாலுதடவைகளுக்குமேல் அயல்நாட்டு தூதுவர்கள் போல் வீடும் சந்தியுமாக போய் மாறி மாறி ஓடித் திரிந்தார்கள்.

என்ன தம்பியவை அமளியாய் ஓடித்திரியிறியள். அப்பா இண் டைக்கு வாறார். சைக்கிளில் திரிந்தார்கள். இடையே மோட்டார் சைக்கிளில் இறங்கினார்கள்.

தெருவில் வசித்த அனைவரும். வெளியே ஓடி வந்து பார்த்தார்கள். அட சுந்தரம் இன்னும் வரேலை. பெடியங்கள் ஓடித் திரி யிறாங்கள்.

சுந்தரம் வந்த பாடாய்யில்லை. மதியம் சாப்பிட்டு குட்டித் தூக்கம் போட்டநேரம். முதலில் சைக்கிள் ஒன்று மணி அடித்தபடி விரைந்து ஓடியது. அடுத்து மோட்டார் சைக்கிள் ஓசையோடு சுந்தரத்தின் மகனின் கத்தல். அப்பா வந்திட்டார்!!! காரொன்று விரைந்து வந்தது. அதில் சுந்தரம் இருந்தார். தெருவில் பெரும் கூட்டமே வேடிக்கை பார்த்தது. மருதனார்மடம் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் படிக்கும் போது ஒருமுறை டட்லி சேன நாயக்கா பாடசாலைக்கு வந்தார். அவ் வருகை அப்போது பெரிதாக இருந்தது. இப்போது இந்தச்சுந்தரத்தின் வருகை அதை விட பெரியது போல் தோன்றியது. மனிசி என்னை உலுப்பினாள். என்னை படுத்துக்கிடக்கிறியள். ஆட்டுக்கு குழையை வெட்டி கட்டிப்போட்டு மங்களம் வீட்டைபோட்டு வாங்கோ. மங்களத் தின்ர அவர் - கந்தசாமியர் வெளியில் இருந்து வந்திருக்கிறார். ஒருக்கால் போய் பார்த்துக் கொண்டு வாங்கோ.

எனக்கு இப்போது ஞாபகம் வந்தது. "ஓமப்பா அண்டைக்கி வழியில் காரில போகேக்க கைகாட்டிப் போனவர்" நானும் மறந்து போனன்.

மங்களம் வீடு வெளிநாட்டு புதுமணத்தம்பதிகள் போல் புதிதாக கூட்டமைத்துக் கொண்ட அரசியற் கட்சிகள் போல் ஒரே கிராமத்தைசேர்ந்த சமாதான நீதிவான்கள் ஒன்றாக இருப்பது போல்...

(அடுத்த வாரமும் வருவார்கள்...)

# இராசி பலன்







### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**வாழ்வில் முன்னேற முயற்சியால் வாய்ப்பை உருவாக்கும், மேஷ இராசிக்காரர்களே!**

எந்த செயலையும் விமர்சையாக நடத்துவீர்கள்.

எதிரியினால் வருகிற தொந்தரவு கூட நன்மையானதாக மாற்றம் பெறும். குடும்பத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற, தாராள பணவசதி துணைநிற்கும்.வாகன பராமரிப்பு மேற்கொண்டு. கூடுதல் பயன்பாட்டு வசதிபெறுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.




### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**ஆன்மிக நம்பிக்கை உள்ளவர்களை மதிப்புடன் நடத்தும், ரிஷப இராசிக்காரர்களே!**

வாழ்வில் கூடுதல் வளம்பெற, புதிய வாய்ப்புக்கள் உருவாகும். இனிய வார்த்தை பேசி, அக்கம் பக்கத்தவர்களின் நல்அன்பை பெறுவீர்கள். உடல் நலம் ஆரோக் கியம் சிறப்பாக அமையும். புதிய பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர்களின் வருகையால், தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் தேர்ச்சி பெற்று, ஆசிரியரிடம் நன்மதிப்பு பெறுவர்.




### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**வாழ்வில் ஆடம்பர செயலை குறைத்துக் கொள்ளும், மிதுன இராசிக்காரர்களே!**

பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவதால், பணக்கடன் பெறுவதை தவிர்க் கலாம். இளைய சகோதர வகையில், மங்கலப்பேச்சு வார்த்தை நல்ல பலன்களை உருவாக்கும். வாகன பயணத்தில், மிதவேகம் பின்பற்றவும். உங்களின் பணித் திறமை கண்டு, பொறாமை குணத்துடன் பேசுபவரிடம் விலகுவது நல்லது. உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு வகை உண்பது தவிர்க்கவும்.




### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**பிறர் நலன் சிறக்க, மனம் உவந்து உதவுகின்ற, கடக இராசிக்காரர்களே!**

பேசுவதில் நியாயம், நேர்மை மிகுந்திருப்பினும் இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவது அவசியமாகும். கூடுதல் செலவுகளுக்கு, சேமிப்பு பணம் பயன்படும். புத்திரரின் தேவைகளை ஓரளவு நிறைவேற்றுவீர்கள். உடல் நலம் சீராக இருக்க, ஊட்டச்சத்து நிறைந்த உணவு உண்பது அவசியம். பெண்கள் ஒற்றுமை குணத்துடன், குடும்ப நலம் பேணுவர்.




### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**சமூகத்தில் நீதி நேர்மை வளர, உரிய பணிபுரிகின்ற, சிம்ம இராசிக்காரர்களே!**

எதிர்பாராத வகையில் வாழ்வில் நல்ல திருப்பம் உருவாகி, மனதை மகிழ்விக்கும். எந்தப் பணியையும், ஆர்வமுடன் மேற்கொள்வீர்கள். நற்பெயரும், புகழும் தாமாக வந்து சேரும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் ஏற்படும். புத்திரர் வகையில் சுப பலன் உண்டு. தொழிலில் அபிவிருத்தி பணிபுரிந்து உற்பத்தி, விற்பனையில் முன்னேற்றம் பெறுவீர்கள்.




### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

**எதிர்கால நலனை கவனத்தில் வைத்து, செயல்படும் கன்னி இராசிக்காரர்களே!**

திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். மனதில் நிம்மதியும், பெரு மிதமும் ஏற்படும். சமூக நிகழ்வு இனிதாக அமைந்து, புதிய அனுபவம் பெற்றுத்தரும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு நடைமுறை பின்பற்றவும். புத்திர ரின் படிப்பு வளர்ச்சி பெற, தேவையான உதவி வழங்குவீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு, திருப்திகர பணவரவு பெறுவர்.




### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**மனதில் கருணையும், செயலில் பொறுமையும் நிறைந்த, துலாம் இராசிக்காரர்களே!**

மனதில் புத்துணர்வுடன் பணிபுரிவீர்கள். புதிய செயல்கள், அசாத்தியமாக எளிதில் நிறைவேறும். பணவரவு திருப்திகரமாக கிடைக்கும். இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை, நன்கு உபசரிப்பீர்கள்.புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடந்து கொள்வர். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில், வியாபார வகையில் அரசு உதவி பெற, அனுகூலம் உண்டு.




### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**சூழ்நிலைகளை தமக்குச் சாதகமாக மாற்றும் திறமையுள்ள, விருச்சிக இராசிக்காரர்களே!**

எந்த செயலையும், உரிய பரிசீலனையுடன் மேற்கொள்வதால் மட்டுமே, முழுமையான பலன் கிடைக்கும். நண்பர், உறவினரின் கருத்துகளை விமர்சிக்க வேண்டாம். வீடு, வாகனத்தில் அளவான பயன்பாட்டு வசதி கிடைக்கும். புத்திரரின் விருப்பம், ஓரளவு நிறைவேற்றுவீர்கள். எதிரியால் வருகிற சிரமம், மாற்று உபாயத்தால் சரி செய்வது அவசியம்.




### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

**சந்தோஷ நிகழ்வுகளை பொக்கிஷமாக கருதும், தனுசு இராசிக்காரர்களே!**

இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நின்று உதவும். இளைய சகோதரர், கூடுதல் அன்பு பாராட்டுவர். வீடு, வாகன வகையில் திருப்திகரமான பலன் உண்டு. புத்திரர் படிப்பில் முன்னேற, தேவையான வசதிகளை உருவாக்கித் தருவீர்கள். உடல்நலம் ஆரோக்கிய பலம் பெறும். இல்லறத்துணையிடம் கொண்டிருந்த கருத்து வேறுபாடு விலகி, ஒற்றுமை வளரும்.தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.




### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

**மனதில் தெளிவுடன் பணிகளில் ஈடுபடும், மகர இராசிக்காரர்களே!**

மனதில் சஞ்சலம் ஏற்படுத்தும். வீணாக பேசி, பொழுது போக்குபவரிடம் விலகு வதால் மட்டுமே, திட்டமிட்ட பணிகளை நிறைவேற்ற, கால அவகாசம் கிடைக்கும். வீடு, புத்தி ரர் நன்றாக படிப்பர், உடல் நல ஆரோக் கியம் சீராக இருக்கும். இல்லறத் துணை யின், சிறு குறைகளை பெருந்தன்மையுடன் சரி செய்வீர்கள். சேமிப்பு பணத்தை குடும்பத்தின் அத்தியாவசிய செலவுக்கு பயன்படுத்துவர்.




### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

**நல்லவர் கருத்தை மனப்பூர்வமாக ஏற்கின்ற, கும்ப இராசிக்காரர்களே!**

மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். தாராள பணவசதி அமைந்து, குடும்பத் தின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அக்கம், பக்கத்தவருடன் அளவுடன் பேசுவதால், நற்பெயரை பாதுகாக்கலாம். வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரரின் செயல்குறைகளை சரி செய்வதில், இதமான அணுகு முறை நல்லது. வழக்கு விவகாரம் உள்ளவர்களுக்கு, அனுகூலத் தீர்வு கிடைக்கும்.




### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**உலக விஷயங்களை அறிவதில் ஆர்வமுள்ள, மீன இராசிக்காரர்களே!**

பணிகளில் முன் யோசனையுடன் ஈடுபடுவது அவசியம். குடும்பத் தேவையை நிறைவேற்ற, சேமிப்பு பணம் செலவு ஆவதும், சிறு அளவில் பணக்கடன் பெறுவதுமான நிலைமை இருக்கும். பிறர் பொருளை பாதுகாக்கிற பொறுப்பு ஏற்க வேண்டாம்.புத்திரர் நல்ல குணத்துடன் நடந்து கொள்வர். பகைமை குணம் உள்ளவர், உதவுவது போல பாசாங்கு செய்து சிரமம் உருவாக்குவர். அவர்களிடம் விலகுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்



## எது நீதி ?

இடி! மழை! புயல்
இதயம் கனக்கிறது

யாரோ ஒருவன் தானோ - என
விட்டுச் செல்ல மனதில்லை
வீதியோரம் நாதியற்றுக் கிடக்கும்
அவன்
ஆண்டவன் படைப்பில் பாவியாம்!
சிலர் சொல்கிறார்கள்
சிலர் சிரிக்கிறார்கள்

பிழையாய் உருப்பிடித்த
பித்தன் அவன்தானோ!
காலைமுடங்க வைத்தான்
கழுத்தை நெரித்தானா?
வாயை அடைத்துவைத்தான்
வயிற்றை அடைத்தானா?
கையும் இல்லையென்றால் - அவன்
கதிதான் என்னவாகும்
இரப்பது தவறென்றால்
இறப்பது நீதியாகுமா?

நந்தா
வழக்கம்பரை



## என் அம்மா

என் உலகம் திறந்து
வைத்த முதல் சாவி
விரல் பிடித்து வழி
காட்டும் முதல் தோழி
என்னை பூமிக்கு அறிமுகம்
செய்த முதல் தேவதை
என் கண்களில் படர்ந்த
முதல் உருவம்
என் உதடுகளில் உதித்த
முதல் வார்த்தை
இந்த உயிர் இந்த உடல்
இந்த வாழ்க்கை எல்லாமே
அவள் தந்தது தாய் தமிழில்
சிக்காத ஓர் அழகிய கவிதை
அதுவும் முதல் கவிதை
என் அம்மா.....

ப்ரியா,
கொக்குவில் மேற்கு.

## நானும் காதலன்

காதலிக்கும் எண்ணம் இல்லை
காதலிக்க நேரம் இல்லை
கவிதை சொல்ல வார்த்தை இல்லை
கவிதை எழுதும் உணர்வும் இல்லை



நிலவாய் வந்தாள்
நிஜமாய் என்முன்
நிமிர்ந்து பார்த்தேன்
நினைவு இழந்து போனேன்

உதிரம் சற்று உந்திப்பாய
உணர்வு கொஞ்சம் முன்னே செல்ல
உறவு கடந்த அன்பு கொண்ட மனம்
உள்ளத்தில் வைத்தது அவளைக் காதல்
மனைவியாய்
இன்று நானும் ஒரு காதலன்


பு.பிரசாந்தன்
தங்கபுரம், அளம்பில்.

## பிறந்த நாள்

நீ....
என்னை
பிரசவித்து
எனக்கும் உனக்குமான
உறவைப் பிரித்ததன்
நினைவுநாள்.

த.பருத்தி: தாசன்





## புள்ளடி போடுவதற்காக

மரணித்துப்போன
ஜனநாயகத்துக்கு,
புத்துயிர் கொடுக்கும்
'புனிதப்பணியில்,
போலிகளும் - பொம்மாத்துகளும்
கை கோர்த்திருக்கின்றன!

சருகுகள் மலராகுமென்றும்
சவுக்குகள் சந்தனமாகுமென்றும்,
சத்திய வாக்குக் கொடுத்தவர்கள்
சகலத்தையும் மறந்துவிட்டு,
சாட் சாத்
சத்திய புருசர்களாக
மீண்டும் சந்திக் (கு) க வருகிறார்கள்!

சூதுக்கும் சூட்சிக்கும்
சுகங்களை
பறி கொடுத்தவர்கள்
காட்சிகளிலும் ஆட்சிகளிலும்
ஆனந்தம் தேடும் ஆவலில்
மீட்சிக்காக அலை மோதுகிறார்கள்
மீண்டுமொரு
தேர்தல் திருவிழாவிற்காக....

அடிகளின் தழும்புகள்
மாறவில்லை இன்னும்
வெடிகளின் புதைகுழிகள்
மூடவில்லை இன்னும்
தடி தாக்குகளுக்கும்
கொடி பிடிப்புகளுக்கும்
தன்னையே மறந்து
தயாராகிறது ஒரு கூட்டம்!

அகதி வாழ்வு மாறவில்லை!
அடுப்படியில்
பூனை படுக்கிறது!
திக்கற்ற நிலை
திரும்பும் திசையெல்லாம்
தெரிந்த போதும்,

நன்றி மறவாத நாயாக,
நாளும் வலி பொறுக்கும்
தாயாக,
சொல்லடிகளின் சூடு
மாறுமுன்,
செல்லடிகளின் - சீற்றம்
மாறு முன் -
புள்ளடி போடுவதற்கு
புறப்பட்டு விட்டது
எல்லாம் தெரிந்தும் - ஒன்றும் தெரியாத
ஒரு கூட்டம்!

நா.ஜெயபாலன் - பிபிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா



நடிகை குஷ்புவை தன்னுடைய காதலுக்கு தூது போகும்படி கேட்டுள்ளாராம் சிம்பு. வயது வித்தியாசம் பார்க்காமல் நட்பாகப் பழகுவது குஷ்புவுக்கு கைவந்த கலை.

ஒருபுறம் அரசியலில் தீவிரமாக இருந்தாலும் கோடம்பாக்க நண்பர்களுக்கு தினமும் ஒரு முறையாவது ஹலோ சொல்ல யோசிப்பதேயில்லை அவர்.

சமீபத்தில் கூட ஹன்சிகா மோத்வானியை தன் வீட்டுக்கு வரவழைத்து ஆசி வழங்கி அனுப்பியுள்ளார். ஹன்சிகாவுக்கும் குஷ்புவுக்கும் இருக்கும் நட்பை மனதில் கொண்டு அண்மையில் குஷ்புவை சந்தித்தாராம் சிம்பு.

''ஐந்து வருடம் கழித்து கல்யாணம் பண்ணலாமா என்று ஹன்சிகா கேட்கிறாள் விரைவில் திருமணம் செய்ய நீங்கள் தான் எப்படியாவது அவளை சம்மதிக்கச் செய்ய வேண்டும்'' என்று குஷ்புவிடம் கெஞ்சியுள்ளார் சிம்பு.

சிம்புவுக்காக இப்போது ஹன்சிகாவிடம் குஷ்பு தூது போக ஆரம்பித்திருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தூதுபோகும் குஷ்பு

## கைதான ஜேம்ஸ் வசந்தன்

திரைப்பட இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் பாலியல் தொல்லை கொடுத்ததாக வன்கொடுமை சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். 'சுப்பிரமணியபுரம்', 'பசங்க' உள்ளிட்ட சில படங்களுக்கு ஜேம்ஸ் வசந்தன் இசையமைத்துள்ளார். மேலும் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் இவர் பணியாற்றி வருகிறார். இந்த நிலையில் சென்னை பாலவாக்கத்தை சேர்ந்த ராதாதேவி பிரசாத் என்பவர் நீலாங்கரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை அளித்திருந்தார். அதில் தனது பக்கத்து வீட்டில் வசிக்கும் இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் தனக்குப் பாலியல் தொல்லை கொடுப்பதாகத் தெரிவித்திருந்தார். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் நீலாங்கரை பொலிசார் வன்கொடுமை சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தனைக் கைது செய்தனர். இது குறித்து ஜேம்ஸ் வசந்தன் ஊடகத்தினரிடம் கூறுகையில், ''என் மீது என்ன வழக்கு போட்டு உள்ளார்கள் என்பதைப் பொலிஸார் தெரிவிக்கவில்லை. தீவிரவாதியைக் கைது செய்வது போல் 40க்கும் மேற்பட்ட பொலிசார் என் வீட்டுக்குள் புகுந்து கைது செய்துள்ளனர். உண்மையில் எனது பக்கத்து வீட்டில் உள்ள பெண் எனது இடத்தை கேட்டதற்கு நான் தரமறுத்துவிட்டேன். பொலிஸ் கமிஷனர் ஜோர்ஜ்க்கு அவர் வேண்டியவர் என்பதால் என் மீது பொய் வழக்கு போட்டு உள்ளனர். இதில் தமிழக முதல்வர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் கூறியுள்ளார்.




## அடுத்தது யார்?

'ஐ' படத்தின் பின்னணி வேலை... நிறைய இருப்பதால், படத்தை ... பொங்கலுக்கு வெளியிட தீர்மா... துள்ளார் ஷங்கர். இதன் ... ஸ்டாருடன் அடுத்த படம் செய்... திட்டம் உள்ளதாம். எனினும் வி... நடிக்கவுள்ள படத்தையே ஷங்க... இயக்கவுள்ளார் என்றும் இன்னொ... தெரிவிக்கிறது. ஆனால் ஷங்க... பணியாற்றவுள்ளமை குறித்து ... தாப்போ, விஜய் தாப்போ இது... வாய்திறக்கவில்லை.




## சரத் நாயகி த்ரிஷா

கௌதம் மேனன்-சரத்குமார் கூட்டணியில் உருவாகும் படத்தில் த்ரிஷா நாயகியாக நடிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தற்போது 'துருவ நட்சத்திரம்' படத்தில் பரபரப்பாக ஈடுபட்டு வரும் கௌதம் மேனன், இதனைத் தொடர்ந்து சரத்குமாருடன் கூட்டணி சேருகிறார். இது குறித்து சரத்குமார் கூறுகையில், ''ஏற்கனவே பச்சைக்கிளி முத்துச்சரம் படத்தில் நாங்கள் இருவரும் இணைந்து பணியாற்றினோம். தற்போது 'துருவ நட்சத்திரத்திற்கு' பின்பு புதிய படத்திற்கான வேலைகளை தொடங்கவுள்ளன'' என்றார்.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் த்ரிஷாவை இப்படத்தில் சரத்துக்கு ஜோடியாக நடிக்க வைக்க முடிவு செய்துள்ளாராம் கௌதம். ஏற்கெனவே இவர் இயக்கத்தில் த்ரிஷா நடித்து வெளிவந்த 'விண்ணைத்தாண்டி வருவாயா' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. புதிய படத்துக்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது த்ரிஷா ஜெயம் ரவியுடன் ''பூலோகம்'', ஜீவாவுடன் ''என்றென்றும் புன்னகை'', தமிழ் தெலுங்கு என்று இரு மொழிகளிலும் தயாராகி வரும் ''ரம்'' ஆகிய படங் களில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆறேழு படங்களில் தொடர்ந்து 'கோட் -சூட்' போட்டு நடித்தவர் அஜித். ஆனால் இப்போது அதனை உதறிவிட்டு வேட்டிக்கு மாறியுள்ளார். 'சிறுத்தை' சிவா இயக்கும் படத்தில் முழுக்க முழுக்க வேட்டி, சட்டையில் கிராமத்து இளைஞனாக நடிக்கிறார் அஜித். ஹைதராபாத்தில் அஜித் வீடு, ஐயனார் சிலை, கிராமம் எனப் பெரிய அரங்கம் அமைத்துப் படமாக்கி வருகிறார்கள். இதைவிட வெளிநாடுகளிலும் படப்பிடிப்பு நடைபெறவிருக்கிறது. விநாயகம் பிரதர்ஸ் என இப்போது இந்தப் படத்துக்கு பெயரிடப்பட்டிருந்தாலும் அது மாறலாம் என்றும் தெரியவருகிறது.

## ஹிந்தியில் புரட்சித் தமிழன்



சத்யராஜ் 'சென்னை எக்ஸ் பிரஸ்' படத்தில் ஷாருக்கான் மாமனாராக நடித்து மும்பையில் கால் பதித்துவிட்டார். அடுத்து ராஜமௌலி இயக்கும் 'பாகுபலி' படமும் ஹிந்தி பேசும் என்பதால், அடுத்தடுத்து அவருக்கு ஹிந்தி வாய்ப்புகள் வர உள்ளன. பிரபுதேவாவும் சத்யராஜை ஹிந்திக்கு அழைத்துள்ளாராம். ஆனால் என்ன அங்கே 'புரட்சித் தமிழன்' என்று பட்டமெல்லாம் போட முடியாதே!

…வேலைகள் …ததை …தீர்மானித் …ன் … சூப்பர் … செய்யவும் …வும் விஜய் …ஷங்கர் அடுத்து …ன்னொரு தரப்பு …ங்கரோடு …த்து ரஜினி … இதுவரை



## களமிறங்கும் கமலின் அடுத்த மகள்



கமலின் மூத்த மகள் ஸ்ருதி சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் தனது இளைய மகள் அக்ஷாராவையும் கதாநாயகியாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் உலக நாயகன். தெலுங்கு மற்றும் ஹிந்திப் படங்களில் ஸ்ருதி நேரமின்றி நடித்து வருகிறார். அண்மையில் ரமணாவின் ஹிந்திப் பதிப்புப் படத்தில் தமன்னாவை ஓரங்கட்டி விட்டு ஒப்பந்தமாகியுள்ளார் ஸ்ருதி. இப்படி ஸ்ருதியின் சினிமா வாழ்க்கை நன்றாகப் போய்க்கொண்டிருப்பதால், அடுத்து தனது இளைய மகள் அக்ஷாராவையும் கதாநாயகியாக களமிறக்கத் தயாராகி வருகிறார் கமல். அக்ஷாராவுக்கு சினிமாவில் நடிப்பதை விட இயக்குநராவதிலும் ஆர்வம் உள்ளதாம். அதற்காக பிரபல இக்குநர் ஒருவரிடம் துணை இயக்குநராக சேர்ந்துள்ளார். ஆனால், சில மாதங்களுக்கு முன்பு சி.சி.எல் கிரிக்கெட் போட்டிகளிலும், சமீபத்தில் ஹைதராபாத்தில் நடந்த பிலிம்பேர் விருது நிகழ்ச்சியிலும் அக்ஷாராவைப் பார்த்த தெலுங்கு தயாரிப்பாளர்கள் அவரை நடிக்கச் சொல்லி நச்சரித்துக் கொண்டிருக்கிறார்களாம். அநேகமாக தெலுங்கில் தான் அவரது அறிமுகம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புகழ் மாலை

'வணக்கம் சென்னை' என்ற படத்தில் நடித்து வருகிறார் ப்ரியா ஆனந்த். அந்தப் படத்தில் இயக்குநர் கிருத்திகாவை ஏகத்துக்கும் புகழ்ந்து வருகிறார் ப்ரியா ஆனந்த். "கிருத்திகா சினிமாவுக்குப் புதுசு என்பதால் முதலில் அவரை அலட்சியமாகவே பார்த்தேன். ஆனால் அவரின் திறமையைக் கண்டு வியந்து போனேன். இருந்து பாருங்கள். கிருத்திகா தமிழில் முன்னணி இயக்குநராக வருவார்" என்று எல்லோரிடமும் சொல்லி வருகிறார் ப்ரியா ஆனந்த்.

…ழ் சினிமாவின் சிரிப்பு சரித்திரத்தை …ண்டமணியின் பெயர் இல்லாமல் எழுத …யாது. இப்போதும் அவரின் நகைச்சுவைக் …சிகளை ஒளிபரப்பாமல் எந்த ஒரு …லைக்காட்சி அலைவரிசையும் இல்லை. …டும் கவுண்டமணி நாயகனாக நடிக்க …க்கிறார் என்பது தான் கோடம்பாக்கத்தின் …றைய சூடான செய்தியாக இருக்கிறது. …வரை 600க்கும் மேற்பட்ட படங்களில் …துள்ளார் கவுண்டமணி. நாயகனாகவும் சில …களில் நடித்து இருக்கிறார். …லையில் மீண்டும் நாயகனாக நடிக்க …ம் தெரிவித்து இருக்கிறாராம் …டமணி. தற்போது சாந்தனுவுடன் …மை' என்ற படத்தில் நடித்து வருகிறார் …டமணி. அதனைத் தொடர்ந்து அவர் …நர் வெற்றிமாறன் தயாரிக்கும் படத்தில் …னாக நடிக்க இருக்கிறாராம். …வெற்றிமாறனின் உதவியாளர் …ப்படத்தினை இயக்குவார் என்று தகவல் …வெளியாகியுள்ளது.

## காஜல் மறுத்தால் தமன்னா





கே.வி.ஆனந்த் இயக்கும் படத்துக்கு 150 நாள்களை ஒதுக்கியுள்ளார் தனுஷ். முழுக்க முழுக்க அதிரடி கொண்ட விறுவிறுப்பான கதையைக் கொண்ட இந்தப் படத்தில் இன்னமும் கதாநாயகி யார் என்பது குறித்து முடிவாகவில்லை. தனுஷுடன் ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடக்கிறது. சில வேளைகளில் காஜல் கைவிட்டால் தமன்னாவை அணுகவிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யோசனைகளும் மந்திரமும்

ஒவ்வொரு யோசனைக்கும் மாற்று வழி என்ன என்பதையும் சேர்த்து எழுதி வைப் பது. மாற்று வழி என்ன? வேறுமுறைகள் எவை என்பதையும் பட்டியலாக எழுதி வையுங்கள். அந்த மந்திரக் கேள்விகளோடு மாற்று வழி கள் - வேறு முறைகள் இவற்றை உரசிப் பாருங் கள். ஆனால் யோசனைகள் உருவாகிற அந்தக் கட்டத்திலேயே அவற்றை எடை போடாதீர்கள். விமர்சிக்காதீர்கள் தீர்ப்பு அளித்து விடாதீர்கள்.

உங்கள் யோசனைகளை எழுதி வையுங் கள். மாற்று வழிகள் வேறு முறைகள் இவற் றைப் (அவை நூறு வகைகளாக இருக்கலாம்) பட்டியல் போடுங்கள். பிறகு - இவ்வாறு பட்டி யல் போட்ட பிறகு மட்டுமே சாத்தியக் கூறு களை - மாற்று வழிகளை - வேறு வழிகளைப் பற்றி மதிப்பிட வேண்டும். விமர்சிக்கத் தொடங்க வேண்டும். தீர்ப்புக் கூற வேண்டும்.

ஆனால் சில யோசனைகள் செயலுக்கு உகந்ததாக இருக்காது. சில முட்டாள்த்தனமாகத் தோன்றும். இன்னும் சில சிரிப்புக்கு இடமான தாகக் கூட இருக்கும். அவற்றை எடுத்த எடுப்பில் தள்ளிவிடாதீர்கள். அப்படிப் பட்ட யோசனைகளை முதலில் பரிசோதனை செய்து பாருங்கள். நான் பல ஆண்டுகளுக்கு முன்பு, மீன்பிடிக்கும் விளையாட்டில் அமெ ரிக்காவிலேயே சம்பியன் பட்டம் பெற்றேன். (1957 ஆம் ஆண்டில் 'அவுட் டோர் லைப்' எனும் பத்திரிகை இவ்வாறு பிரகடனம் செய் தது). பல்வேறு நிலைமைகளில் நான் 28 மீன் களைப் பிடித்தேன். பிறகு நானே சில வழிகளை யோசித்து அவற்றைக் கடைப்பிடித்தேன். நாள டைவில் ஒரு நாளைக்கு 60 மீன்களை, பாஸ் எனும் விசேட வகை மீன்களை சராசரியாகப் பிடித்து வரத் தொடங்கினேன். இதற்குத் தேவை யான வழிமுறைகளை, நானே யோசித்துக் கண்டுபிடித்தேன். தூண்டிலில் வைக்கும் இரை யெல்லாம் செயற்கையானவை. நானே அவற் றைக் கண்டுபிடித்தேன்; வடிவமைத்தேன்.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் - இந்த சாதனையை எட்டிப் பிடித்தது. என்னு டைய விசேட திறமையால் அல்ல. (ஏன் என் றால் மீன் பிடிப்பதில் என்னை விடத் திறமை வாய்ந்தவர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். நான் செய்தது என்ன? அதிகமான மீன்களைப் பிடிக்க - மீன்பிடி முறையை மேம்படுத்த புதிய யோசனைகளை சிந்தித்து உருவாக்கினேன். தூண்டிலில் வைக்கும் இரையை நானே உரு வாக்கி, அதற்கு உரிய நிறத்தைக் கொடுத்தேன். அதன் மூலம் தூண்டிலில் உள்ள இரையை புதிய முறை யில் செலுத்தினேன்.

எனது சொந்த அனு வத்தை இங்கே வலியுறுத் திக் கூறுவது சில அம்சங்களை நினைவுறுத்துவதற் காகத் தான்...

1. மேம்பாட்டுக்காக உருவாக் கப்படும் யோச னைகளை எதற்காக வேண்டுமானாலும் பயன் படுத்தலாம் (மீன் பிடித்தலுக்குக்கூட)

2. எந்த ஒரு யோசனையாக இருந்தாலும் - அது நகைப்புக்கிடமாக சாத்தியமற்றதாக இருந்தாலும் கூட - தள்ளிவிடாதீர்கள். அதை முதலில் பரிசோ தனை செய்து பாருங்கள். அதன் விளைவு நீங்களே ஆச்சரியப்படும் அளவு - அபாரமான தாக இருந்து விடக்கூடும்.

3.ஆரம்ப யோசனை செயல்படவில்லை என்றா லும் அதன் மாற்று வழி - வேறுபட்ட வடிவம் செயல்படக்கூடும்.


**சுடர் ஒளி வாசகர்களே !**



குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


விஷயங்களை மேம்படுத்துவதற்கான யோசனை களை உருவாக்க நிரூபிக்கப்பட்ட வெற்றிகர மான வழிகள் மேலும் சில இங்கே தரப்படுகின்றன.

ஒரு புதிய யோசனையை சிந்திக்க விரும் பினால்- ஒரு வெள்ளைத் தாளையே பார்த்துக் கொண்டு- உட்கார்ந்திருக்க வேண்டாம் - புத்திசாலித்தனமான செம்மையான யோசனை வந்து குதித்து விடாது.

உடனே எழுதத் தொடங்கி விடுங்கள். குறிப்பிட்ட ஒரு பொருள் பற்றி மட்டும் அல்ல; எந்தப் பொருள் ஆனாலும் சரி- எதைப்பற்றி எது தோன்றினாலும் உடனே எழுதத் தொடங்கி விடுங்கள். அந்தப் பொருள் அர்த்த மற்றதாக இருந்தாலும் - மந்தமானதாக இருந் தாலும் சரி; எதுவாக இருந்தாலும் எழுதத் தொடங்கிவிடுங் கள். ஒரு பிரபலமான எழுத்தாளர் இருக்கிறார். அவர் எதையாவது எழுதுவார். காலையில் அவர் முதன் முதலாக டைப் செய்து பச்சை நிற பாலே டைக் கட்டியால் செய்யப்பட்டது தான் நிலவு' என்று எழுதுவார். பிறகு அவர் நிலவைப்பற்றி பச்சை நிறத்தைப்பற்றி; பாலேடைக் கட்டியைப் பற்றி எழுதத் தொடங்குவார். இப்படி அவர் மனதுக்குத் தோன்றியவற்றைப் பற்றியெல்லாம் எழுதிக் கொண்டிருப்பார். அவரது கற்பனா சக்தி சூடேறும் வரை அல்லது அவர் விரும்புகிற கருத்து ஊற்றுப் போல பெருகும்வரை இப்படி எழுதிக் கொண்டிருப்பார். கருத்துகள், புதிய யோச னைகள் ஊற்றெ டுக்க வேண்டுமானால் நீங்கள் அளவைப் பற்றிக் கவலைப்பட வேண்டுமே தவிர - தரத் தைப் பற்றி கருதக் கூடாது.

முதலில் உங்களுக்குத் தோன்றும் யோசனை களை - மாற்று வழிகளை, மாற்று யோசனை களை அப்படியே கெட்டியாகப் பிடித்துக் கொள் ளுங்கள். அவை தப்பி ஓடிவிடாதபடி எல்லாவற் றையும் காகிதத்தில் எழுதி வைத்து விடுங்கள். ஏனென்றால் யோசனைகள் என் பவை நழுவிச் சென்றுவிடக் கூடிய தன்மை படைத்தவை. எல்லா யோசனைகளையும் நீங்கள் காகிதத்தில் எழுதி வைக்கவில்லை என்றால் அவை காற்றில் கலந்து விடும். பிறகு அவற்றைப் பற்றி தீர்ப் புக்கு வரலாம். மதிப்பிடலாம். பரிசோதனை செய்யலாம். யோசனைகளை உருவாகும் போதே அவற்றை மதிப்பிடமுடியாது.

மேலும் யோசனைகளை உருவாக்குவதை யும் மாற்று வழிகள் மறு யோசனைகள் இவற்றை உருவாக்குவதையும் உடனே நிறுத்திவிடாதீர் கள் - ஏன் என்றால் யோசனை என்பது மேம் பாட்டுத் திட்டத்தின் முதல் கட்டம், ஆரம்பம் மட்டுமே. மேம்பாட்டின் முழு வடிவமே அந்த யோசனை என்று கருதாதீர்கள். மேம்பாடு என்கிற முழு கட்டத்தில் உங்களுடைய யோசனை ஒரு மூலக் கல் போன்றது. ஆனால் அந்தக் கல் மட்டுமே முழுக் கட்டடமும் ஆகி விடாது.

ஒவ்வொரு புது யோசனையுடனும் அதன் தொடர்புடைய இணைப்பு யோசனையும் சேர்க்கபட்டு இருக்க வேண்டும். ஒரு யோசனை - அதன் கிளை யோசனைகளுடன் இணைக்கப் பட்டு இருக்க வேண்டும். ஒரு ஒழுங்கான முழு மையான சிந்தனைக் கட்டமைப்பில்; யோர்சனை கள் ஒருங்கிணைந்த முறையில் தொகுக்கப் பட்டிருக்க வேண்டும். தயாரிக்கப்படும் வடி வமைப்புகள் - தொடங்கப்படும் திட்டங்கள் - நிறைவு பெற்ற மேம்பாட்டு முயற்சிகள் - இவை பற்றிய எல்லாம் அந்த ஒருங்கிணைந்த யோசனை களின் இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு புதிய யோசனையுடனும் பின் கண்ட விவரங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ' மேலும் என்ன உள்ளன ? 'இப்போது என்ன நிலைமை? ஒரு வேளை இப்படி இருந்தால்....? ஒரு வேளை நாம் இப்படி முயற்சி செய்தால் ஆகிய இது போன்ற அம்சங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். இதற்கு முன்னர் நாம் பார்த்த 13 ஆவது அத்தி யாயத்தில் உள்ள 61 மந்திரக் கேள்விகளைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள்.

விஷயங்களை மேம்படுத்திட - யோசனை களை - வழிமுறைகளை - திட்டங்களை - அமைப் புகளை உருவாக்கி வாருங்கள். எது உங்களை மேலும் பயன்மிக்கவராக்குமோ - எது உங்களை அதிக மதிப்புள்ளவராக்குமோ - அந்த யோச னையை உருவாக்குங்கள். அவற்றின் வாயிலாக நீங்கள் சீக்கிரம் செல் வந்தராகி விடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை ! வேலை !! வேலை !!!



இன்றைய உலகில் வேகமான நகர்வும் செயற்பாடுகளும் அதிகமாக இருக்கின்றதால் அதில் ஈடுபடுகின்ற பெண்களிற்கும் நேரம் என்பது மிகவும் சிக்கலான ஒரு விடயமாகவே இருக்கின்றது. வீட்டைக் கவனிப்பதற்கும் வேலைக்குச் செல்வதற்கும் பிற காரியங்களில் ஈடுபடுவதற்கும் நேரம் சரியாக இடங்கொடுக்காமையால் அது மிகப்பெரிய தலையிடியை பெண்களிற்கு ஏற்படுத்திவிடுகின்றது. எதைப் பார்த்தாலும் எதைக் கேட்டாலும் எதைச் சொன்னாலும் எரிந்துவிழுகின்ற தன்மை இன்றைய பெண்களின் குணமாகி விடுகின்றது. அத்தகைய பிரச்சினைகளைத் தீரக்க இதோ சில வழிகள்!

★ நாளைக்குச் செய்ய வேண்டிய வேலைகளை இன்று படுக்கைக்குச் செல்லுமுன் நன்கு விலாவாரியாக நேர அடிப்படையிலும் முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் திட்டமிட்டுவிட்டு படுக்கைக்குச் செல்லுங்கள்.

★ நாளை நீங்கள் வேலைக்கு அணிந்து செல்லுகின்ற ஆடை, குழந்தைகளின் ஆடை என்பவற்றை முதன் நாளின் இரவே தயார் செய்து அயன் செய்து சரியான முறையில் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்.

★ அலுவலகத்தில் உங்களிற்கு நாளைக்கு இருக்கின்ற வேலை, அது தொடர்பான கோப்புக்கள் மற்றும் பத்திரங்கள் என்பவற்றை ச் சரியாக இருக்கின்றதா என்பதை ஒருமுறை சரிபார்த்து விட்டு அவற்றை ஒரு தனிக் கோப்பிற்குள் இட்டு வைத்துக்கொள்ளுங்கள்.

★ அதிகாலை ஐந்து மணிக்கு எழவேண்டியிருந்தால் அதற்கும் சற்று பத்துநிமிடங்களிற்கு முன்னரே எழும்பி உங்கள் மனதையும் அதற்கேற்பத் தயாராக்கிக்கொள்ளுங்கள்.

★ குழந்தைகளின் தேவைகள் மற்றும் வீட்டுத்தேவைகளை சரியான நேரத்தில் முடித்துக்கொள்ளவும் குடும்பத்திலுள்ள மற்றவர்களின் தேவைகளை முடித்துக் கொள்ளவும் முயற்சி செய்யுங்கள்.

★ சரியான நேரத்திற்கு நீங்களும் தயாராகி வேலைக்குச் செல்லமுடிவதுடன் மற்றவர்களையும் தயார்செய்து அனுப்பமுடிவதுடன் எந்தவித பதட்டமோ அல்லது தாமதமாகச் செல்லலோ இன்றி சரியான முறையில் வேலைக்குச் செல்வதுடன் திருப்தியாக வேலையிலீடுபடவும் முடியும்.

★ இத்தகைய வழிமுறைகளை வாழ்வில் கைக்கொண்டு செயற்பட்டால் உங்களின் வேண்டாத கோபம், எரிச்சல், மனவுளைவு போன்றனவற்றிலிருந்து மீண்டு அழகான வாழ்வை வாழமுடியும்.

# புதுயுகத்தைத் தேடி......

## மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி

## கல்பனாவின் கற்பனை..!

நிலாவைப் பெண்ணிற்கு ஒப்பிட்ட காலம் போய் வானவெளியில் பெண் உலாவருகின்ற காலமாக மாறிவிட்ட இக்காலத்தில் பெண்களின் பெருமைகளைப் பற்றி மனம் பூரிப்படையவும் புல்லரிக்கவும் செய்கின்ற அதே நேரம் சில மனதால் ஏற்றுக்கொள்ள முடியாத எதிர்பாராத விபரிதங்களும் நடந்து முடிந்து விடுகின்றன. சாதனையை விரும்பி அதை நோக்கி நகர்கின்ற பெண்களின் பட்டியலில் தனக்கென்று நிலையான ஒரு இடத்தைப் பெற்றிருக்கின்ற அழியாத விண்வெளி நட்சத்திரமாக நிலைத்திருக்கின்ற விண்வெளிப்பெண் கல்பனா சாவ்லா சாதிக்கத் துடிக்கும் பெண்களின் பெருமடையாளம்.

சாதாரணமான ஒரு குடும்பத்தில் இந்தியாவின் ஹரியான மாநிலத்தின் கரனல் என்கின்ற இடத்தில் 1961 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி பிறந்து உலக அறிவியல் மையமான நாசாவில் முக்கியமான ஒரு பங்கையும் அமெரிக்க குடியுரிமையையும் பெற்ற விண்வெளிப்பெண் என்ற பெருமைக்குப் பொருத்தமானவர்.



பஞ்சாப் பொறியியற் கல்லூரியில் விமான ஊர்தியியல் துறையில் இளங்கலைப் பட்டத் தைப் பெற்று அமெரிக்க டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் விண்வெளிப் பொறியியற் பிரிவில் முதுகலைப் பட்டத்தை யும் கொலராடோ பௌல்தேரில் பல்கலைக்கழகத்தில் 1986ஆம் ஆண்டு இரண்டாம் முதுகலைப் பட்டத் தையும் பெற்றவர். தொடர்ந்து 1988ஆம் ஆண்டு அதே துறையில் முனைவர் பட்டத்தையும் பெற் றுக் கொண்டவர். நாசாப்பிரிவு 1994 இல் சித்தியடைந்து சாதனை செய்த பெண்ணிய விண்வெளியாளர்.

காரிசன் என்கின்ற விமானமோட்டு கின்ற பயிற்சியாசிரிய ரைத் திருமணம் செய்த சாவ்லா, நாசாவில் பல அதி முக்கியமான பணிகளைச் செய்தவர். சில தொழில்நுட்ப சீர்திருத்தங்கள் உள்ளிட்ட கடுமையான பணிகளில் ஈடு பட்டவர். அவருடைய அதி உயர் அனுபவத்தினதும் ஆற்றலினதும் விளைவாகக் கொலம்பிய விண்வெளி வீரர்கள் 7 பேருடன் சேர்ந்து ஒரேயொரு பெண்ணாக விண்வெளிக்குச் செல் லத் தெரிவுசெய்யப்பட்டார். STS - 107 திட்டத்தின் மூலம் பயணமாகி விண்வெளியில் தன்னுடைய கடமைகளை முடித்துத் திரும்புகின்ற நேரம் பூமிக்கு அருகில் டெக்ஸாஸிற்கு மேலாகக் கோளாறு காரணமாக விமானம் வெடித்துச்சிதறிய போது 2003 ஜனவரியில் கல்பனா சாவ்லாவை நாங்கள் இழக்க வேண்டியிருந்தது. ஆனால் அவரின் ஞாபகமாக இந்தியாவும் சரி அமெரிக்காவும் சரி பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கி வருகின்றன. அவருடைய சேவையைப் பாராட்டியும் ஆற்றலை மதித்தும் பல்வேறுபட்ட விருதுகள் அவர் இறந்த பின்னும் வழங்கப்பட்டுள்ளது.



ஸ்பேஸ் மெடல் ஒப் ஒனர்
ஸ்பேஸ் பிளைட் மெடல்
டிஸ்டிங்குவிட் ஸெவிஸ் மெடல்
டிபென்ஸ் டிஸ்டிங்குவிட் ஸெவிஸ் மெடல் என்பன அவற்றுள் சில. கல்பனா என்றால் கற்பனை என்று அர்த்தமாம். பல அறிவியல் கற்பனைகளோடு காத் திருந்த ஒரு உண்மையான ஆற்றலும் அறிவும் முயற்சியுமுள்ள பெண்மணியை விதிவசமாக இழந்திருக்கிறோம். எம்மில் எத்தனை பேர் அந்த இடைவெளியை நிரப்பி உண்மையான ஒரு மரியாதையையும் விருதையும் அவரிற்கு வழங்கப்போகிறோம்.?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பம்பல் பரமசிவம்

**அச்சா வாச்சுப் போச்சு..... மளமள வென்று ஆகஷைப் புரட்டி எழுப்பினேன். வேலிச் சண்டை இல்லாட்டிலும் ஒரு கோழிச் சண்டை தொடங்கியிருக்கிறது..... இதுவும் வேலிச் சண்டை மாதிரி படு திறில்லாயிருக்கும்....**

# கோழிச் சண்டை

என்னதான் இருந்தாலும் இந்தப் பிள்ளையள் ஜேர்மனி திரும்பிப் போக இன்னும் மூன்று நாள்கள் தான் இருக்குது எண்டது ஒரு கவலைதான். அடிக்கொரு தடவை 'பெறியப்பா' 'பெறியம்மா' 'பொறியல்' நல்லா இருந்தது. நாளைக்கும் இறால் பொறியல் செய்யுங்கோ எண்டு சுற்றிச் சுற்றி வருங்கள்.

அல்லாமலும் நடுச்சாமத்தில் நான் வீட்டிற்குப் போனாலும் வழமையான குரைப்பு இருக்காது. நான் ஏதாவது ஏறுமாறாகப் பேசி, தங்கச்சியாரினதும், மச்சான் காரரினதும், பிள்ளைகளினதும் மனசை உடைச்சு விடுவேனோ என்ற பயத்தில் குழைந்தபடியே இருப்பா எனது சம்சாரம்.

சம்சாரம் இப்படியிருக்கையில், வந்த பிள்ளைகளுக்கு ஒரு வேலிச் சண்டையைக் காட்ட முடியாமற் போய் விட்டதே என்ற சமாச்சாரம் என்னைக் குடைந்து கொண்டே இருந்தது.

ரமேஷ் சின்னப் பொடியனாய் இருந்த காலத்திலை, வாரத்தில ஒரு வேலிச் சண்டை எண்டாலும் நடைபெறும். மாரி காலமென்றால் சில வேளை ஒரே நாளில இரண்டு வேலிச் சண்டைகள் நடைபெற்றாலும் நடைபெறும்.

அந்தச் சண்டையைப் பார்க்கிறதோ, இந்தச் சண்டையைப் பார்க்கிறதோ என்ற அங்கலாய்ப்பாயிருக்கும். ஆனாலும் பொன்னர் சண்டையில இறங்கினாரெண்டால், அந்தப் பக்கம் கொஞ்சம் கூடப் பார்வையாளர் வருவர். அந்தளவிற்கு அவரின் 'சவுண்ட்டும்' பயன்படும் மொழிகள், வார்த்தைப் பியோகமும் இருக்கும்.

போட்டியாளர் ஊக்க மருந்து பாவித்திருந்தால், கிறிக்கெட், புட்போல் மற்றும் மெய் வல்லுநர் போட்டிகளில் நீக்கப்படுவர். ஆனால் வேலிச்சண்டையின் போது ஊக்க மருந்து அல்லது தடை செய்யப்பட்ட மருந்துகள் பாவிக்க கூடாது என்ற வரையறைகள் இல்லை. இதனால் இத்தகைய வேலிச்சண்டைகள் சுவையாக அமைவது உண்டு. ஏற்கனவே நான் குறிப்பிட்டது. போல கண்களுக்கும் காதுகளுக்கும் ஒரே நேரத்தில் விருந்தாக அமைவது உண்டு.

அதிலும் நெருங்கிய உறவுக்குள் இத்தகைய வேலிச்சண்டைகள் உருவாகுமிடத்து, சண்டை 'டே'யில் தொடங்கினாலும் அது சண்டே ஆயினும் சரி 'மண்டே' ஆயினும் சரி மண்டை உடைவிலேயே அச் சண்டைகள் முடிவுக்கு வரும். இது சண்டைபிடித்தவர்கள் தாம் இரத்தின் இரத்த உறவுகள் என்பதற்கு ஓர் அடையாளம்.

ஒரு பக்கத்துக் காணி தமையனதும் அடுத்த காணி தங்கச்சியாரினதும் ஏன்று இருந்து, இடையிலுள்ள வேலி காரணமாக சண்டை தொடங்கிவிட்டால் தங்கச்சியின் பக்கம் ஞாயம் இருந்தாலும் தமையன் பெண்சாதி இலேசில் விடா. ஏனெனில் இது ஒரு கௌரவப் பிரச்சினை இதனை ஏன் கௌரவப் பிரச்சினை என்கிறேன். என்றால் இது கௌரவ பாண்டவர் காலத்திலிருந்து தொடரும் ஒரு பிரச்சினையாகும்.

இதே போன்று தமையன் பக்கதில் ஞாயம் இருந்தாலும் தங்கச்சியாரின் கணவன் இலேசில் சண்டை தணிவதனை விரும்பார். அப்படிச் சமாதானமாகப் போனால், அது தமது குடும்பத்திற்கு ஒரு இழுக்கு என்ற தன்மான உணர்வு. எனவே காணி விற்றேனும் அச் சண்டைகள் தொடர்ந்தன. இப்போது எல்லாம் 'சப்' பென்று ஆகி விட்டது.

ஆகாஷைப் பார்க்கப் பாவமாக இருந்தது. இந்தப் பிள்ளை ஆகாஷ்- ஆயிரம் மைல்கள் வந்து, தன் மண்ணில் ஒரு வேலிச் சண்டையும் பார்க்காமற் போவதென்றால் ......

அங்காலை காது கொடுத்துப் கேட்டேன். பாக்கியம் மாமி வீட்டுக் கிணற்றடிப் பக்கம் தான் சத்தம் கேட்டது ஒன்று பாக்கியம் மாமியின் 'வொய்ஸ்' ஆ.... ஆரையும் இழுத்துப் பேசத் தொடங்கினால் பேச்சுத்தான்........ மற்றக் குரல், அவவின் அடுத்த வீட்டு சரசு அக்கா..... 'என்னவாம்?' என்று என் சக தர்மணியிடம் கேட்டேன்.

"சரசு அக்கா வீட்டுக் கோழி ஒன்றைக் காணேல்லையாம் வந்து பார்த்துக் கொண்டு போனவ..... இரவு கோழி வீட்டுக்கு வந்திடும் எண்டு போனவ.... இன்னும் காணேல்லை...... அது தான் ஆரையோ திட்டிப் பேசிக் கொண்டு நிண்டவ......." என்று 'பக்ற்'சைக் கூறினார். என் மனைவி.

அச்சா வாச்சுப் போச்சு..... மளமள வென்று ஆகஷைப் புரட்டி எழுப்பினேன். வேலிச் சண்டை இல்லாட்டிலும் ஒரு கோழிச் சண்டை தொடங்கியிருக்கிறது..... இதுவும் வேலிச் சண்டை மாதிரி படு 'திறில்'லாயிருக்கும்.... எழும்பு... எழும்பு என்று அவசரப்படுத்தினன்.

சண்டை எண்ட சொல்லைக் கேட்டது தான் தாமதம் அந்தப் பிள்ளை சாமம் எண்டு பாராமல், காலமை எட்டு மணி, அவன் நித்திரையால் எழும்புற நேரத்துக்கு இது சாமம் தான்- துடிச்சு எழும்பினான்.

பின்புற மதிலால் சண்டை நடைபெறும் சண்டை நடைபெறும் கள நிலவரத்தைப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமாய் விளங்கவில்லை. "கோழிச் சண்டை எண்டியள்... கோழிகளைக் காணேல்ல. ஒரு அப்பம்மாவும், ஒரு அக்காவும் எல்லோ பேச்சுப் படுகினம்....?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டான். "ஆகாஷ்... கோழிகளைக் காணாததாலை வாறது தான் கோழிச்சண்டை" எண்டு விளங்கப்படுத்தினான். "அப்ப கோழியள் சண்டை பிடி;காதோ? விளங்காமல் கேட்டான். ஆகாஷ் அதுவும் கோழிச் சண்டைதான்.... கோழியும் கோழியும் அதுகளின்ரை கொண்டை இரத்தம் வழிய, வழிய சண்டை போடும்..... இதுகள் தொண்டை இரத்தம் வழிய வழிய ஏச்சு ஏச்சுப்படுங்கள்..... ஒரு கட்டத்தில் அவவின்ரை கொண்டையை இவ பிடிக்க, இழுக்க, சண்டை இன்னொரு கட்டத்துக்குப் போகும்" எண்டு நான் விளங்கப்படுத்தவும்,

"உவள் என்னடி கேட்டவள்? உவள் என்னடி கேட்டவள்?" என்று "வள்" ளென்று கத்திக் கொண்டு சண்முகம் மாமா - பாக்கியம் மாமியின்ரை அவர் களத்துக்கு வர சண்டை, இன்னொரு கட்டத்துக்கு அசைவியக் கம் பெற்றது.


யாழ். மண்ணில் காலடி எடுத்து வைத்த பயனை அடைந்து விட்டது போல ஆகாஷின் விழிகள் அகலத் திறந்தன ரமேஷ் மாமா சொன்ன வேலிச் சண்டையை விட இந்தக் கோழிச்சண்டை என்பது அவனுக்கு பார்க்கேக்க வலு பம்பலாயிருந்தது. வேலிச்சண்டை வேலியும் வேலியும் சண்டை போடுவதல்ல. வேலியைக் காரணமாக வைத்து, ஆட்கள் சண்டை போடுவதுதான் வேலிச்சண்டை என்பது அவனுக்குப் புரிய ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"

யூலியன் எந்தவித பாதுகாப்புமின்றி தனியனாகவே இருப்பதாக எதிரிகள் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டனர். தனியாகச் சிக்கும் யூலியனை மடக்குவதற்கு மயக்க மருந்தும் உச்ச பலமும் மட்டுமே போதும் என்று நம்பி இடுப்பில் சொருகியிருந்த 'பிஸ்டலை' கூடக் கையில் எடுக்காமல் யூலியனின் வைத்த கொலையாளிகள் சிரித்த முகத்தோடு கதவைத் திறந்து யூலியன் மீது ஆவேசத்தோடு பாய்வதற்குப் பதிலாக ஆணி அடித்தது போல் அறைவாசலிலேயே விறைத்துப் போய் நின்றனர். ஏனெனில் கொலையாளிகள் ஐந்து பேரினதும் பிடரிகளை முத்தமிட்டது போல் யூலியனின் மெய்ப்பாது காவலர்களின் துப்பாக்கிகள் ஒட்டிக் கொண்டிருந்தன. 'கைகளை மேலே உயர்த்தியபடி உள்ளே வாருங்கள்!' தன் குரலில் கோபத்தை சிறிதும் காட்டாமல் கட்டளையிட்டான் யூலியன். மகுடிக்கு மடங்கின பாம்புகள் போல யூலியனின் வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே செய்வதற்கு எதுவும் இல்லை என்பது வந்தவர்களுக்குப் புரிந்துவிட்டது.



# இருளின் கதவுகளைத் திறந்தவன்

● ஔண்யன்

13

**கெ**ன்யாவில் கால் வைத்த போது தன்னுடைய உயிருக்கும் ஆபத்துண்டு என்பதை யூலியனுக்கு நன்கு தெரிந்தே இருந்தது. அதிலும் தன்னால் பாதிக்கப்பட்டவர்கள் நிச்சயம் பழிவாங்காமல் இருக்க மாட்டார்கள் என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். ஏனெனில் ஊழல் பெருச்சாலிகள் அத்தனை பேரினதும் ஜாதகத்தையும் யூலியன் மனப்பாடம் செய்து வைத்திருந்தான். அத்தோடு யூலியனால் விலை கொடுத்து வாங்கப்பட்ட கென்ய அதிகாரிகள் சிலரும் யூலியன் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட இருப்பதை மோப்பம் பிடித்திருந்தார்கள். யூலியனிடம் இருந்து இன்னமும் பணத்தைக் கறப்பதற்காக தமக்குத் தெரிந்த இந்த இரகசியத்தை யூலியனின் காதிலும் போட்டு வைத்தார்கள்.

அதற்குப் பிறகு யூலியனுக்கு என்ன செய்வதென்று யாரும் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்? மளமளவென்று சில பாதுகாப்பு ஏற்பாடுகளை யூலியன் காதும் காதும் வைத்தது போல செய்து முடித்தான். 'தன்னைக் கொல்லப் போகிறார்கள்.' என்ற தகவல் கிடைத்த நொடியே யூலியன் செய்த காரியம் கென்யாவில் உள்ள மிக நம்பிக்கையான ஊழலுக்கு இடம் கொடுக்காத தனியார் பாதுகாப்புப் பிரிவொன்றின் துணிவை நாடியது தான். அவர்கள் கேட்ட தொகையை மறுபேச்சின்றி கொடுத்து விட்டு வந்து சில நிமிடங்களிலேயே யூலியன் தங்கியிருந்த அறையின் இரு புறத்திலும் உள்ள அறைகளில் தனியார் பாதுகாப்புப் பிரிவொன்றின் துணையை நாடியது தான். அவர்கள் கேட்ட தொகையை மறுபேச்சின்றி யூலியன் கொடுத்து விட்டு வந்த சில நிமிடங்களிலேயே யூலியன் தங்கியிருந்த அறையின் இரு புறத்திலும் உள்ள அறைகளில் தனியார் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த எட்டு வீரர்கள் எப்போதும் கண்ணில் எண்ணெய் விட்டபடி காவல் இருக்கத் தொடங்கினர். அவர்களும் உல்லாசப் பயணத்தைப் போலவே வெளியில் காட்டிக் கொண்டதாகவும் யூலியனோடு மறந்தும் கூட உரையாடாமல் இருந்தமையாலும் எவருக்கும் அவர்கள் யூலியனின் மெய்ப்பாதுகாவலர்கள் என்பது தெரியவரவேயில்லை. இதனால் யூலியன் எந்தவித பாதுகாப்புமின்றி தனியனாகவே இருப்பதாக எதிரிகள் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டனர்.

தனியாகச் சிக்கும் யூலியனை மடக்குவதற்கு மயக்க மருந்தும் உச்சபலமும் மட்டுமே போதும் என்று நம்பி இடுப்பில் சொருகியிருந்த 'பிஸ்டலை' கூடக் கையில் எடுக்காமல் கொலையாளிகள் சிரித்த முகத்தோடு கதவைத் திறந்து யூலியன் மீது ஆவேசத்தோடு பாய்வதற்குப் பதிலாக ஆணி அடித்தது போல் அறை வாசலிலேயே விறைத்துப் போய் நின்றனர். ஏனெனில் கொலையாளி கள் ஐந்து பேரினதும் பிடரிகளை முத்த மிட்டது போல் யூலியனின் மெய்ப் பாதுகாவலர்களின் துப்பாக்கிகள் ஒட்டிக் கொண்டிருந்தன.

'கைகளை மேலே உயர்த்திய படி உள்ளே வாருங்கள்!' தன்குரலில் கோபத்தை சிறிதும் கலக்காமல் கட்டளையிட்டான் யூலியன். மகுடிக்கு மடங்கின பாம்புகள் போல யூலியனின் வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே செய்வதற்கு எதுவும் இல்லை என்பது வந்தவர்களுக்குப் புரிந்துவிட்டது. யூலியனின் பேச்சைக் கேட்காவிட்டால் தமது கதி அதோ கதி தான் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். யூலியன் சொற்படி உள்ளே வந்தவர்கள் தம்பாட்டிலேயே தம்மை ஏவி விட்டவர்கள் யார் என்பதையும் ஒன்றும் விடாமல் வெளியே கக்கினார்கள்.

அவர்கள் சொல்வதையெல்லாம் பதிவு செய்து கொண்ட யூலியன் நீட்டி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். கண்களாலேயே தனது மெய்பாதுகாவலர்களுக்கு சைகை செய்தான். 'அவ்வளவு தான்! கதை இத் தோடு முடிந்தது' என்று எண்ணங் கொண்ட கொலையாளிகளுக்கு அடுத்து நடந்தது இன்னும் ஆச்சரியத்தையே பரிசளித்தது. யூலியனின் ஆணைப்படி வெளியே மெய்பாதுகாவலர்கள் உள் நுழைந்த போது உயர் ரக மதுபானங்களும் சுவையான உணவு வகைகளும் முளைத்திருந்தன.

'நீங்கள் வரப் போவது எனக்கு முன்னரே தெரியும். சொல்லாமல் கொள்ளாமல் நீங்கள் வந்தாலும் கூட விருந்தாளிகளை வரவேற்பது என்னுடைய கடமை இன்றைய இராப்போசனம் உங்களிடம் தான்.' என்று குரலில் ஒரு வித கேலியை படரவிட்ட வண்ணம் மதுக் குவளைகளை நிரப்பி வந்தவர்களிடம் நீட்டினான் யூலியன். கொலையாளிகளுக்கு நடப்பது கனவா, நியமா என்று கூடத் தெரியாத திரிசங்கு சொற்ப நிலை 'யூலியன் தருகின்ற மதுவில் விசம் கலந்திருக்குமோ என்ற சந்தேகமும்' அவர்கள் மனதில் எழாமல் இல்லை. நடுங்கும் கரங்களோடு மதுக் குவளைகளைப் பற்றிக் கொண்டார்கள். ஆனால் சிறிது நேரத்தில் அவர்களிற்கு நம்பிக்கை பிறந்தது. மீண்டும் மதுவைக் கேட்டு வாங்கிப் பருகினார்கள்.

காலை விடிந்ததும் தமது காதுகளிற்கு யூலியனின் மரணச் செய்தி தேனாகப் பாயப்போகிறது என சிறையில் இருந்த ஊழல் பேர் வழிகள் தூக்கம் வராது தவித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் இங்கோ யூலியனும் அவரது மெய்ப்பாது காவலர்களும், கொலையாளிகளும் இரவிரவாக நடத்திய விருந்தில் நட்சத்திர விடுதியே விழித்துக் கொண்டது. விருந்து முடிந்ததும் கொலையாளிகளை அந்த அறையிலேயே வைத்துப் பூட்டிவிட்டு தன்னுடைய அடுத்த வேட்டைக்காக அமெரிக்காவுக்குப் பறந்தான் யூலியன்.

(திரைகள் இன்னும் திறக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றிலும் தீ நாக்குகள்

தமிழில்: ஜஸ்ரீன்

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வரை இலங்கை அரசியல் களத்தில் ஒரு பரபரப்பு நிலை தோன்றியிருந்தது. இதற்குக் காரணம் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக யார் நியமிக்கப்பட இருக்கிறார். ஏனைய வேட்பாளர்கள் யார்? யார்? என்பதைத் தெரிவு செய்வதில் ஏற்படிருந்த சிக்கல் நிலைதான்.

இந்த விடயத்தில் முடிவுகாணப்படாது தொடந்தும் இழுபறி நிலையே நீடித்ததால் தமிழ் மக்களிடையே ஒரு குழப்பமான தன்மை ஏற்பட்டிருந்தது. இந்த ஒரு காரணத்துக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுவிடுமோ என்ற கவலை தமிழ் மக்களிடம் தொற்றியிருந்தது. அதேவேளை இப்போதாவது கூட்டமைப்பு பிளவு ஏற்பட்டு விடாதா என்ற பேரவாவுடனாக் காத்திருந்தனர் பெரும்பான்மைக் கட்சியினர்.

தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாத சிந்தனைச் சக்திகளின் மத்தியில் கூட்டமைப்புக்கான முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு விவகாரம் வேறு விதமான எதிர்பார்ப்புகள் இருந்தன. முதல்வர் வேட்பாளர் இழுபறியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு பட்டு அவர்களது தற்போதைய கூட்டுப்பலம் சிதை வடைந்துவிடும் என்றே பேரினவாதிகள் எதிர்பார்த்தனர். வடமாகாணத் தேர்தலுக்கு முன்னராக கூட்டமைப்பு பிளவுபடுவது அதிகாரத்தரப்பின் வெற்றி வாய்ப்புக்கு வழிகோலிவிடும் என்பதுடன், தமிழர் தரப்பின் அரசியல் பேரம் பேசும் குரலின் தொனியையும் குறைத்து விடலாம் என்பதே பேரினவாதிகளின் சிந்தனையாக இருந்தது.

இருப்பினும் இவ்வாறான துர்நோக்கம் கொண்டவர்களின் எண்ணத்தில் இடி விழுந்தது போல எல்லாமே நடந்து முடிந்து விட்டன. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் ஏகமனதாக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனைத் தமது முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளன. அத்தோடு ஏனைய வேட்பாளர்களின் தெரிவும் சுமுகமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டது. கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக சி.வி. விக்னேஸ்வரனின் தெரிவானது இலங்கை அரசைப் பொறுத்தவரையில் ஏமாற்றமாகவே அமைந்து விட்டது. அதை விடவும் கடும் போக்கினைக் கடைப்பிடிக்கும் பொதுபல சேனா மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற அமைப்புக்களும் ஏமாற்றத்தை யளித்துள்ளன. இதன் விளைவாக எட்டாப் பழம் புளிக்கும் என்பது போல காழ்புணர்வுக் கதைகளை வெளியிடத்தொடங்கியுள்ளனர்.

இத்தகைய கதைகள் பல புதிய கண்டுபிடிப்புகளையும் கொண்டிருக்கின்றன. ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அமைச்சரான சம்பிக் ரணவக்கவும் இவ்வாறான புனைவுகளுக்காகச் சில புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளார்.

இந்தியாவும் சர்வசேமும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து நாட்டைப் பிரிப்பதற்கான சூழ்ச்சிகளை முன்னெடுத்துள்ளன. அதன் ஒரு கட்டமாகவே அன்ரன் பாலசிங்கம் போன்ற ஒருவரான முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை நியமித்துள்ளனர். விக்னேஸ்வரன் நாட்டை கூறு போடுவதற்கு துணை போகக் கூடியவர். சர்வதேசத்துடன் இணைந்து சூழ்ச்சிகளை முன்னெடுக்கக் கூடியவர் என்றெல்லாம் சம்பிக்க ரணவக்க தனக்கு என்னென்ன கற்பனைகள் தோன்றுகின்றனவோ அவற்றையெல்லாம் அப்படியே ஒப்பித்து வருகிறார்.

வடமாகாணத்தேர்தலில் விக்னேஸ்வரனை விடுத்து வேறு யாரையும் தன்னும் கூட்டமைப்பு தனது




முதன்மை வேட்பாளராகத் நிறுத்தியிருந்தாலும் கூட இதே கருத்தினையே சம்பிக்க ரணவக்க தெரிவித்திருந்தார். இது போன்ற அழுக்குகள் அவர் போன்ற வேறு பல பேரினவாத அரசியல் வாதிகளின் அடிமனங்களிலும் ஊறிக்கிடக்கின்றன. எனவே இவ்வாறான கருத்துக்கள் தொடர்பில் எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இப்போது பேரினவாதிகளின் அடுத்த இலக்கு 13 ஆவது திருத்தம் தான். வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்தேயாக வேண்டும் என்பதில் பெரும்பான்மைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். விக்னேஸ்வரன் வடக்கின் முதலமைச்சரானால் நாட்டைப் பிரிக்காமல் விட மாட்டார். ஆகையால் அதற்கு முன்னராக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பறித்து விட வேண்டும் என்று பேரினத்தின் உள்ளக்கிடக்கையைச் வெளிப்படுத்தியுள்ளார் சம்பிக்க ரணவக்க.

உண்மையில் இத்தகைய கூற்றுக்களின் மூலம் இனவாதத்தைத் தூண்டவே சம்பிக்க முயற்சிக்கிறார். ஆனால் இவ்வாறானவர்கள் நாட்டில் இனவாதத்தையும் கலவரத்தையும் தூண்டும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்தாகும். அது குறித்து அரசு ஏன் அமைதி காத்து வருகின்றது? என்பது எல்லோருக்கும் விடை தெரிந்த ஒரு கேள்வி.

முன்னெப்போதுமில்லாத இனவாத தீ நாக்குகளின் சுட்டெரிப்புக்கு மத்தியிலேயே வடமாகாண சபைத் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்க வேண்டியுள்ளது. அரசியல் ரீதியாக தெற்கிலிருந்து வீசப்படவுள்ள அணுகுண்டுகளைத் தாங்கிய வண்ணமே வடக்குத் தேர்தலை கூட்டமைப்பு வென்றெடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு வடக்கில் அதிகாரத்துக்குத் துணை போகும் துரோகத்தனத்திலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது என்பதும் யதார்த்தமான உண்மையாகும்.

இன்னொரு புறத்தில் சிங்களப் பேரினவாத சக்திகள் விக்னேஸ்வரனின் அரசியல் நுழைவால் ஆடிப் போய் செய்வதறியாதுள் ளன. இந்த அதிர்ச்சியில் தான் வாய்க்கு வந்த வசைகளை அவர் மீது பாடி வருகின்றன. கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு முடிந்த பின்னர் தான் அரச தரப்பு வேட்பாளர் விபரம் வெளியிடப்பட்டது. அரசு வடமாகாணத்தேர்தல் சதுரங் கத்துக்காக சிலரை அரசு தெரிவுசெய்து வைத்திருந்தது. அவர்களில் முதலமைச்சர் வேட்பாளராக புலிகளின் ஊடகப்பிரிவில் பணியாற்றியவரும். பிரபாகரனின் சடலம் இதுதான் என்று சுட்டு விரலை நீட்டியவருமான தயா மாஸ்ரர் முக்கியமானவர். அவர் சுதந்திரக் கட்சியால்நடத்தப்பட்டிருந்த நேர்முகத்தேர்வில் பங்கு கொண்ட பின்னர் தயா மாஸ்ரர் தான் அரசின் முதலமைச்சர் வேட்பாளர் என்று அரச தரப்பிலிருந்து உறுதிமொழி வழங்கப்பட்டது. அதனை நம்பிய தயாமாஸ்ரர் ஊடகங்களுக்கு வடமாகாணத்தின் முதலமைச்சர் ஆகிவிட்ட நினைப்பில் நேர்காணல்களையும் வழங்கியிருந்தார். ஆனால் விக்னேஸ்வரனின் தெரிவு அரச தரப்பு வேட்பாளர் தெரிவை மறுபரிசீலனை செய்யவைத்துவிட்டன. அதன் விளைவாகவே தயாமாஸ்ரர் முதலமைச்சார் வேட்பாளராக மட்டுமன்றி சாதாரண வேட்பாளராகக் கூட தெரிவு செய்யப்படாமல் தூக்கி எறியப்பட்டார். இவரை இன்னும் நிறையத்தலைகள் காய்வெட் டப்பட, அவர்களெல்லாம் இப்போது சுயேச்சைகளாகக் களமிறங்கியிருக்கின்றனர்.


இனிவரும் நாள்களில் தேர்தல் திருவிழாவின் கூத்துக்களைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு தமிழ்மக்களுக்கு வாய்த்திருக்கிறது. ஆனாலும் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துவிட்டு வாளாவிருக்காமல் தமது வாக்குரிமையை நிலைநாட்டுவதோடு, உரிமைக்கான குரலை வலுப்பெற செய்யவும் அவர்கள் தமது வாக்குகளை ஆயுதங்களாக மாற்றவேண்டும். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உலகம்



இலக்கம் 01 இல் இருந்து 13 வரையிலான இலக்கங்களைத் தொடர்பு படுத்தி உருவத்தைக் கண்டு பிடியுங்கள்.




# மாயத் தீவில் மந்திரக் கிழவி



சிறுவர் மர்மத் தொடர் 14

– அம்புலி

“நீங்கள் நினைப்பதுபோல் உங்களின் தந்தை ஒன்றும் உத்தமனல்ல. ஒருமுறை உங்கள் இருவரையும் எனக்குத் தருவதாக வாக்களித்தான். ஆனால் இப்போது அதை மறந்துவிட்டான். அதனாற்தான் உங்களை நான் கவர்ந்துவரவேண்டிய நிலை ஏற்பட்டது”

என்று சிரிப்பை நிறுத்திவிட்டு கொஞ்சம் கடுமை கலந்த குரலில் மந்திரக் கிழவி.

இளவரசர்கள் இருவருக்கும் ஒரே குழப்பமாக இருந்தது. அவர்களின் தந்தையான நந்திவர்மன் நீதிநெறி பிழைக்காத ஆட்சி புரிபவனென்றே எல்லோரும் புகழ்கின்றனர். அவ்வளவு ஏன்? நந்திவர்மனின் பகை நாட்டு மன்னர்கள் கூட அவனின் ஆட்சி சிறப்பை குறை கூறுவதில்லை. அப்படியிருக்க மாயத்தீவு கிழவி மட்டும் நந்திவர்மனை வாக்குத் தவறியவன் எனக் குற்றம் சாட்டியதால் இளவரசர்கள் ஒரு கணம் குழம்பவே செய்தார்கள்.

“சரி இளவரசர்களே! நேரமாகிக் கொண்டிருக்கிறது. விரைவாக வாருங்கள்” என்று மாயக்கிழவி அவர்களை அழைத்தாள். “நாங்கள் எங்கு வரவேண்டும்?” என்று இந்திரவர்மன் கேட்டான்.

“குழந்தைகளே! இது என்னுடைய பிரதேசமல்ல. என்னுடைய மாயக்களின் உச்சமாக ஒரு மந்திரத் தீவை உருவாக்கி உள்ளேன். அங்கு தான் செல்ல வேண்டும்” என்றாள் கிழவி.

“அங்கு எதற்காகச் செல்ல வேண்டும்?” எனச் சந்திரவர்மன் கேட்டான்.

இளவரசர்கள் இருவரும் மாறி மாறித் தமது கேள்விக் கணைகளால் துளைத்து எடுத்ததால் மாயக்கிழவிக்கு இலேசாக ஆத்திரம் ஏற்பட்டது. தனது வலது உள்ளங்கையை வாயருகே வைத்து, இளவரசர்களை நோக்கி ஊதினாள்.

அவள் கையிலிருந்து, இளம்பச்சைநிற வாயு ஒன்று வெளிப்பட்டது. அந்த வாயு வளைய வடிவெடுத்து, இந்திரவர்மனையும், சந்திரவர்மனையும் சுற்றத் தொடங்கியது.

[மந்திரக் கிழவி வருவாள்...]

| நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| 1) திருக்குறள் | திருவள்ளுவர் |
| 2) மகாபாரதம் | வேதவியாசர் |
| 3) ஆசியஜோதி | தேசிய விநாயகம்பிள்ளை |
| 4) பெரிய புராணம் | சேக்கிழார் |
| 5) சீறாப்புராணம் | உமறுப்புலவர் |
| 6) கந்தபுராணம் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| 7) நளவெண்பா | புகழேந்திப் புலவர் |
| 8) சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 9) மணிமேகலை | சீத்தலைச்சாத்தனார் |
| 10) யாழ்நூல் | விபுலானந்த அடிகள் |
| 11) கீதாஞ்சலி | இரவீந்திரநாத்தாகூர் |
| 12) சூளாமணி | தோழாமொழித்தேவர் |
| 13) மேகதூதம் | காளிதாசர் |
| 14) சீவகசிந்தாமணி | திருத்தக்கதேவர் |
| 15) அபிராமி | அபிராமிப்பட்டர் |
| 16) திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| 17) திருமுருகாற்றுப்படை | நக்கீரர் |
| 18) நைடதம் | அதிவீரராம பாண்டியன் |
| 19) கம்பராமாயணம் | கம்பர் |
| 20) அரிச்சந்திர புராணம் | வீரை ஆசு கவிராயர் |



அ. மேனகா

# தாயும் தாய் நாடும்



ஈழவள நாட்டினிலே எழில் பொங்கும் பதியினிலே
இல்லறமதாம் நல்லறத்தில் வாழ்கின்ற அன்னையே!

உனக்காக நாவினால் கவி வடிக்கின்றேன்.
உன் பெருமையால் தாய் நாட்டை மதிக்கின்றேன்

பத்து மாதங்கள் சுமந்து பாலூட்டி சீராட்டி
பாரினிலே தவழ விட்ட அன்னையே!

கருவினிலே தொடங்கி கல்லறைவரைக்கும்
கனிவான இதமதை சிரம் தாழ்த்தி வணங்கிடுவேன்

அன்னையைப் போலொரு தெய்வமில்லை
அவள் கனிவிற்கு ஈடாக யாருமில்லை

தென்றலாய் கீதமிசைக்கும் உன் அன்பிற்கு
தெவிட்டாத தீந்தமிழாய் நானிருப்பேன்

மகவுமீது கொண்ட காதலால்
மணித்தியாலம் பாராது உழைக்கின்றாள்

தாய்மையே உருவான தங்கத்தாயே
தாய்நாடு சிறக்க என்றும் வாழ்த்திவேன்.

**சா.கிருஸ்ஷிகா,**
கற்கோவளம், பருத்தித்துறை.
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வருகிறாள் தேர்தல் தேவி

■ பூமுகன்

யாழ் தேவியில் நாங்கள் காதல் செய்தால்
யாழ் மீட்டுமே ரயில் தண்டவாளம்
யாழ் மண்ணிலே நாங்கள் கால்பதிக்கவே
வாழ்த்துரைக்குமே ரயில் தண்டவாளம்
எங்கடை மக்களுக்கு - ஓர்
உறவுப் பாலம் நீ - சிறு
சங்கடம் இல்லாமல்
தேசிய சினேகம் வளர்த்திருப்பாய்.....

## சந்தேக வருகை

வடக்கு மக்களின் வாழ்வியலோடு ஒரு காலத்தில் ஒன்றிப் போயிருந்தவள் யாழ்தேவி. கொழும்பில் பணிபுரிந்த யாழ்ப்பாணத்தவர் களுக்கான புஷ்பகவிமானம் யாழ்தேவிதான். வெள்ளிக்கிழமைகளில் பணிமுடிந்த கையோடு யாழ்தேவியில் ஏறினால் அடுத்தநாள் விடிகாலையில் வீட்டில் நிற்கலாம். ஆனால் இடைப்பட்ட போர்க்காலத்தில் அவள் எங்களிடமிருந்து தூரப்போயிருந்தாள். வவுனியாவோடு அவளின் வருகை மட்டுப்படுத் தப்பட்டிருந்தது. இப்போது கிளிநொச்சி வரை யாழ்தேவி அவசர வெள் ளோட்டமாக வந்து போயி ருக்கிறாள். சாதாரண நாள் களில் இந்த பரீட்சார்த்த வருகை நிகழ்ந் திருந்தால் அது கொண்டாட் டத்துக் குரியதாக இருந்தி ருக்கும். ஆனால் தேர்தல் காலத்தில் நிகழ்ந்த இந்தத் தற்காலிக வருகை ஒரு சந் தேகத்தையே எல்லோருக் கும் ஏற்படுத்தியிருக்கிறது. உண்மையிலேயே தொடர்ச்சி யான போக்குவரத்துக்காகத் தான் அவளின் இந்த வருகை நிகழ்ந்ததா? அல்லது வடக் கில் இயல்பு வாழ்வு திரும்பி விட்டது என்று நம்பவைத்து வாக்குகளை கவரத் தான் இந்த வருகையா? என்ற கேள்விகளுக்கு இனி விடியப் போகும் பொழுதுகளே பதில் சொல்லவேண்டும்.



இயற்கை உணர்வுடன் கூடிய இந்தப் பாடல் எல்லோரையும் கவர்ந்தது. பாடல் கவர்ந்த அளவுக்கு யாழ்தேவி யாரையும் கவரவில்லை என்பதுதான் வரலாறு.

வடக்கு மாகாணத்துக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டு,அந்த நாளும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இந்த அமளியோடு அடுத்த மாதம் யாழ்தேவி ரயில் கிளிநொச்சிவரை தனது சேவையை விஸ்தரிக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தியின் பிரதான ஊடகமாக இருப்பது வீதி வலையமைப்பே. இதனூடான போக்குவரத்து சேவைகள் அபிவிருத்திக்கான ஏதுக்களை ஊக்குவிக்கின்றன. ஆனால், வடக்கின் விவசாய உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை போக்குவரத்துக் காரணிகள் தடைசெய்ய,வடமாகாணத்தின் உற்பத்தித் திறன் மங்கிப்போனது.

வடபகுதிக்கான ரயில் சேவை முதன்முதலில் 1902 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது பயணிகள் சேவை அல்ல.இதனூடாகத் தபால் பொதிகளும் வர்த்தகப் பொருட்களுமே பரிமாறப்பட்டன. மிகவும் மந்தமான வேகம் கொண்டதாக இந்த ரயில்சேவை இருந்தது.

இந்த நிலையில் 1956 ஆம் ஆண்டு யாழ்தேவி ஆரம்பிக்கப்பட்டது. வடக்குக்கும் தெற்குக்குமான உறவுப்பாலமாக இந்தச் சேவை அமைந்தது. 411கீ.மீ. தூரம்கொண்ட கொழும்பு கோட்டைக்கும் -காங்கேசன்துறைக்குமான யாழ்தேவி ரயில் பயணத்தின் அனுபவங்களை இப்போதிருக்கும் இளம் தலைமுறை அனுபவிக்கவில்லை.

வயதானவர்கள் மட்டுமே அந்தச் சுவாரசியமான கதைகளைச் சொல்வர்.

மூன்றுபத்தாண்டுகளாக இந்தத் தொடர்பு பேணப்பட, 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி யாழ்தேவி முறிகண்டியில் வைத்து தாக்கப்பட்டது. உயிர் இழப்புடன் கூடிய இந்தத் தாக்குதல் காரணமாகத் தெற்கிற்கான ரயில் தொடர்பும் அறுந்து போனது. இந்தத் தொடர்பின் அறுப்பு ஒரு பிரயாணத்தின் துண்டிப்பு மட்டுமல்லாது,இரண்டு சமூகத்தினருக்குமிடையிலாக அறுப்பானது எனலாம்.

இன்று "தேவி திரும்பி வருகிறாள்" என்ற செய்தியை ஊடகங்களில் வெளிப்படுத்தும்போது, உணர்வார்ந்த பேச்சுக்களும், கதைகளும் இப்போதுள்ள, அந்தக் காலத்து தேவியை அனுபவித்தவர்களிடம் மிளிர்வதைக் காணமுடிகிறது.

கலகலப்பு, ஆரவாரம், புதிய இடத்தைப் பார்க்கும் துடிப்பு, நட்புக்களின் சந்திப்பு என்று இந்தப் புதினங்கள் சொல்லி முற்றுறாதவை.

இன்று வடக்கில் தேர்தல் ஆரவாரத்தோடுதான் தேவி வரும் அறிவிப்பும் வெளிவந்திருக்கிறது. அதுமட்டுமல்ல கிளிநொச்சிவரை பரீட்சார்த்தப் பயணத்தையும் தேவி மேற்கொண்டு வெற்றிபெற்றுள்ளாள்.

90ஆம் ஆண்டுக்குப் பின்னர் மதவாச்சிவரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த தேவியின் பயணம் போருக்குப் பின்னர் வவுனியா, ஓமந்தை என விரிவாக்கப்பட்டு அடுத்தமாதம் கிளிநொச்சி வரைக்கும் தொடரவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ்தேவி ரயில் சேவையை காங்கேசன் துறைவரை நடத்துவதற்கு, புனர்நிர்மாணப் பணிகள் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம்ஆரம்பிக்கப்பட்டது.

பழைமைகளை வெளிக்கொண்டுவர இருக்கும் தேவியின் பயணம் தேர்தல் அறிவிப்பாக இருக்கக்கூடாது. அபிவிருத்தியின் வெளிக்கூறுகள் மட்டும் மக்களின் இயல்புவாழ்வுக்கு உதவிடப்போவதில்லை.பதிலாக உட்கூறுகளில் நிறைவு காணப்படவேண்டும். இன்றும் அடிப்படைவசதிகள் இன்றி வடக்குமக்கள் பெரும்பாலானவர்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு தேவிவருவது தேவையற்றவிடயம்.

அடிக்கட்டுமக்களின் தேவைகளும் அபிவிருத்தி உள்ளடக்கமாக மாறவேண்டும். வடக்கு தெற்கை வேகமாக இணைக்க அதிவேக சாலையும் தயார். ஆனால்....அகதிகள் குடிசைகள் வரப்போகும் மழையில் அடித்துச் செல்லாதிருக்கவும் ஒரு ஆயத்தம் தேவை என்பதை அபிவிருத்தியாளர்கள் கவனிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

## கனகாவைக் கொன்ற ஊடகங்கள்...

**இ. மோகினி, தும்பளை.**

கே : பித்தா! இப்போது வீதியெங்கும் வெள்ளை வேட்டியோடு கையெடுத்துக் கும்பிட்டபடி பெரிய பெரிய போஸ்டர்களில் 'போஸ்' கொடுக்கும் வேட்பாளர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப : நாய் வேசம் போட்டால் குரைக்கத்தானே வேணும். அதுமாதிரித்தான் இவையின்ர வேட்டிக் கோலமும். இதுக்கு முதல் முகத்தில சிரிப்பையே காட்டாத ஆக்களெல்லாம் எலெக்சன் வந்தவுடனே வாயில முப்பத்தாறு பல்லோட (நாலு பல்லு எக்ஸ்ட்ரா) சிரிச்சுக் கொண்டிருக்கிறதப் பாக்க அதிசயமாத்தான் கிடக்கு. ஆனாலும் அவையின்ர ஒரிஜினல் மூஞ்சதானே சனத்துக்கு ஞாபகத்துக்கு



இருக்கும். கன வேட்பாளர்மார் பெரிசா விளம் பரம் செய்தால் சனம் தங்களைப் பெரியாக்களா நினைச்சு வோட் பண்ணு வினம் எண்டு கனவு காணுகினம். ஆனால் உந்தப் பருப்பெல்லாம் வடக்கில வேகிறது கஷ்ரம் பாருங்கோ.

**கே.கோபி, கொக்குவில்.**

கே : பித்து! உங்களுக்கு இரண்டாவது திருமணம் நடப்பதுபோல ஒரு கனவு கண்டேன். அது பலிக்குமா?

ப : அடி மனசில உள்ள எண்ணங்கள்தான் கனவா வருகுதெண்டு சிக்மன் புரெய்ட் எண்ட மேதை கண்டுபிடித்துச் சொன்னவர். உங்களுக்கு இந்தப் பித்தர் நல்லாயிருக்கிறது பிடிக்கேல்ல



போல. அதாலதான் இப்பிடி சிக்கலுக்க மாட்டுற மாதிரி கனவெல்லாம் காணுறியள். நீங்கள் கண்டமாதிரி அப்பிடியொரு அசம்பாவிதம் நடந்தால் மிஸிஸ் பித்தர் சும்மா இருப்பா எண்டு நினைக்கிறியளோ? இப்பவே பித்தரின் சமையலில உப்புக் குறைஞ்சாலே உலக்கையால போடுற மனிசி எக்குத்தப்பா பித்தர் இரண்டாம் கலியாணம் செய்தார் எண்டு தெரிஞ்சா தோலை உரிச்சுக் கருவாடு எல்லோ போட்டிடுவா. இந்தியாவின்ர முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் நாளைய எதிர்காலத்துக்காக இளைஞர்கள் எல்லாரும் கனவு காணவேணும் எண்டு சொன்னவர். நீங்கள் என்னெண்டா என்ர அழிவு காலத்துக்கெல்லோ கனவு காணுறியள். தம்பி கொஞ்சம் நித்திரையைக் குறையுங்கோ!


**ந.மாலினி, மன்னார்.**



கே : பித்தா! இயக்குநர் சேரனின் மகள் தனது காதலுக்கு அப்பாதான் எதிரி என்ற முறைப்பாடு செய்ததும், நான் காதலுக்கு எதிரியல்ல. எனது மகளின் எதிர்காலத்தில் அக்கறை கொள்வது தவறா? என்று சேரனும் மாறிமாறி தொலைக்காட்சிகளில் பேட்டிகொடுத்து வருகிறார்கள். அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப : சினிமாவில இப்பிடி நிறைய 'சீன்' பார்த்திருப்பீங்கள். ஆனால் சினிமாவில காதலை வாழ வைக்கிறம் எண்டு வாய்கிழிய கத்துற நடிகர்களும் இயக்குநர்களும் வாழ்க்கையில அப்பிடி நடக்கிறது குறைவு. இப்ப சேரன்ர முறை. அவர் படத்தில எப்பிடி அழுவாரோ அதைவிடக் கேவலமா அழுகிறத ரீவியில பார்க்க வேண்டிய கட்டாயம் எங்களுக்கு. ஆனாலும் அந்த அழுகையில ஒரு தகப்பன்ர பாசம் தெரியாமலில்லை. மகளும் கொஞ்சம் யோசிச்சு நிதானிச்சு முடிவு எடுக்கலாம். எண்டாலும் ஆற்ற பக்க நியாயம் எண்டு பித்தருக்கு எப்பிடித் தெரியும்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 582



**மேலிருந்து கீழ்**

1. சூரியன்
2. வெண்கலப் பாத்திரத்தில் ஒரு வகையை இப்படி அழைப்பர்.
3. பாதத்தின் அடிப்புறத்துப் பின்பகுதி
4. குதிரைக்கு மறுபெயர்
8. நேசம் (குழம்பியுள்ளது)
10. அமரும் ஆசனம்
12. சங்ககால எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
14. வைத்திய முறைகள் அடங்கிய நூலை இப்படிக் கூறுவர்.
16. வளையல்.
17. சூட்டுச்சத்தம் இவ்வாறு குறிப்பிடப்படும்
20. ஆகாயத்தில் மிதந்து செல்.

**இடமிருந்து வலம்**

1. உரம்
3. ஒரு இராசி
5. கர்ப்பம்
6. அரைவாசி
7. இராமனின் ஒரு மகன்
9. முஸ்லிம்களின் வழக்கை விசாரிக்கும் நீதிபதியை இவ்விதம் அழைப்பர்
11. வீண் சண்டைக்கு அழைத்தல்/ சீண்டுதல்
12. விடலைப் பருவத்தினருக்கு முகத்தில் ஏற்படுவது
13. ஆசை/ விருப்பம்
15. இந்துக்களின் நான்கு வேதங்களில் முதன்மையானது
18. கோணங்களை அளக்கும் அலகு
19. எண்ணெயில் பொரித்தெடுக்கப்படும் உப உணவுப் பொருள்.
21. அகம் என்பதன் எதிர்ச்சொல்
22. கற்றல் செயற்பாடு.

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 582

சொற்சிலம்பம் 581 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 04 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 579 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. அறிவிலி, 2. கிரயம், 3. மட்டமானி, 4. நடு, 5. கொம்பு,7. கர்மம், 9. ஆசனம், 10. துற, 11. ஆரணம் 14. அகால் 15. ஆயா

**இடமிருந்து வலம்**

1. அக்கிரமம், 5. கொடு, 6. விமைபிடகம், 8. மார்பு, 10. மனது, 12. மாசற்ற, 13.அரம், 16. காண, 17. ஓம், 18. மாயாஜாலம்.

### போட்டி இல. 579 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | சி.குகராஜா, இல. 36/35, கண்டி வீதி, சுமேதகம, திருகோணமலை. |
| 2ஆம் பரிசு | க.தில்லையம்பலம், கதிர்காம கோயிலடி, வதிரி, கரவெட்டி. |
| 3ஆம் பரிசு | வி.சுகந்தி, மே/பா வே.இராசநாயகம், சோரன் பற்று, பளை. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) கனகசபை நாகேந்திரன்
இல. 11 - 3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.
(2) திருமதி சி.விமலா,
சந்தை வீதி, வந்தாறுமூலை.
(3) சி.இராசரத்தினம்,
பூம்பொழில், திருநகர் தெற்கு, கிளிநொச்சி.
(4) வே.இராசநாயகம்,
சோரன்பற்று, பளை.
(5) எம்.எம்.மலர்விழி ஜேசுதாசன்,
இயேசு இல்லம், 155/ 07, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு - 13.
(6) செல்வி P. செல்வநாயகம்,
இல. 108 5/3, மனிங் பிளேஸ், கொழும்பு - 06.
(7) வஸந்தா பாலேந்திரா,
இல. 21, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை
(8) வே.கார்த்திகேசு,
விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.
(9) வி.செல்வநாயகம்,
சிவன்கோயில் புதுவீதி, புத்தூர்.
(10) திருமதி சி.புஸ்பராணி,
'வசந்த பவனம்', மருததடி மேற்கு, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் காதலர்களுக்காக...

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்கான குழுக்களும், போட்டி அட்டவணையும், போட்டி நடைபெறும் இடங்களும் அறி விக்கப்பட்டுள்ளன. இதன் படி 2015ஆம் ஆண்டுபெப்ரவரிமாதம் 14ஆம் திகதி (காதலர் தினத்தன்று) ஆரம்பிக்கும் கிரிக்கெட் காதலர்களுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை அவுஸ் திரேலியா மற்றும் நியூசிலாந்து என்பன இணைந்து நடத்து கின்றன.




உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக் கப்பட்டு 40 வருடங்கள் பூர்த்தி யாகும் நிலையில் நடைபெறவுள்ள 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் மிகவும் முக்கியமானவையாக அமையும் என சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறை வேற்று அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் தெரிவித்தார். 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் 23 வருடங்கள் கழித்து அவுஸ்திரேலியாவில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் 14 நகராங் களில், 44 நாட்களில், 49 போட்டிகளைக் கொண்டதாக 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி நிறை வடையும் வகையில் போட்டி கள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியின் போதான சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான அணிகளின் தரப்படுத்தலின் அடிப்படையில் குழு ஏ, குழு பி என இரு குழுக்களாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன.

குழு ஏ இல் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இலங்கை, பங்களாதேஷ், நியூ சிலாந்து, தகுதிகாண் அணி 2 மற்றும் தகுதிகாண் அணி 3 ஆகியனவும், குழு பி இல் தென்னா பிரிக்கா, இந்தியா, பாகிஸ் தான், மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே, அயர்லாந்து மற்றும் தகுதிகாண் அணி 4 ஆகியனவும் போட்டியிடவுள்ளன. தகுதிகாண் அணிகளாக கனடா, நெதர்லாந்து, ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து அணிகளி லிருந்து மூன்று அணிகள் அவற்றின் பெறுபேறுகளைப் பொறுத்து ஐ.சி.சி.யால் உள்வாங்கப்படும்.

2015 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு முழுதாக ஒன்றரை வருடங்கள் இருக் கும் நிலையில் எந்த அணி கிண்ணத்தை வெல்லும் என்பதை எதிர்வு கூறுவது மிகவும் கடினமே! இருந்தும், இந்திய அணி கிண்ணத்தை வெல்லும் என அதன் முன் னாள் அணித்தலைவர் கபில் தேவ் கூறியுள்ளார். 28 வருடங்களுக்குப் பிறகு கடந்த 2011இல் உலகக் கிண் ணம் வென்ற இந்திய அணி தற்போது இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் சிறப்பாக பிரகாசித்து வரும் நிலை யிலும், புதிய வீரர்களான ஷிகர் தவான், ரவீந்திர ஜடேயா, புவனேஸ்வர் குமார் உள்ளிட்ட இளம் வீரர்கள் அசத்தும் பட்சத்திலும் இந்தியா கிண்ணம் வெல்வது எளிதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கபில்தேவின் கருத்துக்கள் மறுப்பதற்கில்லை. காரணம், டோனி தலைமை யில் தற்போது இருக்கின்ற இளம் இந்திய அணியே நிச்சயம் எதிர்வரும் 2015 உலகக் கிண் ணத்திலும் விளையாடுவார்கள். இந்த இடைவெளிக்குள் யாராவது புதிதாக அணிக்குள் உட்புகுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தவிர, அவர்களது வெளிநாட்டு மண் பெறுபேறுகளும் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

இந்தியாவைத்தவிர போட்டிகளை நடத்தும், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளை விட வெளி அணிகளான தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத்தீவுகள்அணிகளுக்குகிண்ணம்வெல்வதற் கான வாய்ப்புக்கள் அதிகம். பல இளம் வீரர்கள் இவ்விரு அணிகளிலும் பிரகாசித்து வருவதுடன் அவுஸ்திரேலிய உபகண்டத்தில் இவர்களது பெறு பேறுகள் சிறப்பாக இருக்கின்றன. இலங்கை, இங் கிலாந்து, பாகிஸ்தான் அணிகளும் கிண்ணம் வெல் லும் போட்டியில் கடும் பிரயத்தனம் கொடுக்கும். உள் ளூர் இரசிகர்களது ஆதரவும் சாதகமான காலநிலை யும் அதிக செல்வாக்குச் செலுத்தினால் நியூசிலாந்து முதல் தடவையாகவோ அல்லது அவுஸ்திரேலியா ஐந்தாவது தடவையாகவே கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பும் இருக்கின்றது.

# கிரிக்கெட் கரும்புள்ளி



நடுவர்களே ஒரு விளையாட்டின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வல்லமை கொண்டவர்கள். களத்தில் நடுவரின் தீர்ப்புக்கு வீரர்கள் தலை வணங் கியே ஆகவேண்டும். தீர்ப்பு வழங்குவதில் நடுவர் தவறிழைத்தால் கூட அதற்கு வீரர்கள் கட்டுப்பட வேண்டும். மாறாக தமது எதிர்ப்பை வெளியிட்டாலோ அல்லது ஆட்சேபனை தெரிவித்தாலோ அல்லது நடுவருக்கு எதிரான வார்த்தை களைப் பிரயோகித்தாலோ குறித்த வீரருக்கு அபராதம், மஞ்சள் அட்டை, சிவப்பு அட்டை, போட்டித் தடை என்று தண்டனைகளின் பட்டியல் நீளும்.

ஆனால் எல்லா நடுவர்களும் நேர்மையாக நடக்கிறார்களா என்றால் இல்லை என்றே பதில் வரும். அண்மையில் கிரிக்கெட் உலகில் நடுவர்களின் பெயருக்கு களங்கம் விளைவித்தவர் அஸாத் ரவூப். இவர் பாகிஸ்தானைச் சேர்ந்த நடுவர். ஆயினும் இந்திய விளம்பர அழகி ஒருவரோடு உல்லாசமாக இருந்துவிட்டு அவரைத் திருமணம் செய்வதாக ஏமாற்றி விட்டார். ஏனைய விளம்பர அழகிகள் இவ்வாறு பிரபலங்களோடு பழகுவதும் பின்னர் அவர்கள் விட்டெறியும் பணத்தைப் பெற்றுக் கொண்டு விலகு வதும் வாடிக்கை. ஆனால் அஸாத் ரவூப்பின் காதலி அதிலிருந்து விலகி தானும் அஸாத்தும் நெருக்கமாய் இருந்த புகைப்படங்களை வெளி யிட்டு நீதி கேட்டார். இதனால் கடும் நெருக்கடிக்கு அஸாத் தள்ளப் பட்டார். சிறிது காலம் நடுவர் பணியிலிருந்து ஒதுங்கியிருந்த அவர் பின்னர் மீண்டும் களம் திரும்பினார். இந்த வருடம் நடைபெற்ற ஐ.பி.எல்.போட்டிகளில் பங்கேற்றார். ஆனால் அஸாத்துக்கும் ஐ.பி.எல்.தொடரில் நடைபெற்ற சூதாட்டத்துக்கும் தொடர்பு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகின. ஆயினும் அவரை பொலிஸார் நெருங்குவதற்கு இடையில் அஸாத் பாகிஸ்தானுக்குப் பறந்துவிட்டார். ஐ.பி.எல்.விதிகளின்படி பிறநாட்டில் இருப்பவரை விசாரிக்க முடியாது என்பதால் தற்காலிமாக அஸாத் தப்பிக் கொண்டார்.

அஸாத்தின் இத்தகைய மோசமான நடவடிக்கைகளால் அவரின் நடுவர் பணி மீது ஐ.சி.சி.க்கு சந்தேகம் ஏற்பட்டது. பணத்தைப் பெற்றுக்கொண்டு அணிகளுக்கு எதிரான அல்லது சாதகமான தீர்ப்பை வழங்கிவிடுவரா என்பதே அந்தச் சந்தேகம். இதனால் பிரதான நடுவர்கள் பட்டியலில் இருந்து அவரது பெயர் நீக்கப்பட்டதால் டெஸ்ட் போட்டிகளில் பணியாற்றும் தகுதியை இழந்தார் அஸாத். இந்த அவ மானத்தின் பின்னரும் நடுவர் பணியில் நீடிக்க விரும்பாததால் இப்போது ஓய்வை அறிவித்துள்ளார். ஆயினும் கிரிக்கெட் நடுவர்கள் வரலாற்றில் அவரது பெயர் ஒரு கரும்புள்ளியாகவே இருக்கப் போகிறது.

விளையாட்டு


தொகுப்பு : வரூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு அரசு

அக்கினிபுத்திரன்



**2009** ஆம் ஆண்டு மே மாதத்துக்கு முன்பு இலங்கையில் இரு அரசுகள் இருந்தன. ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசு.

மற்றது வடக்குக் கிழக்கின் சில பகுதிகளில் இயங்கிய வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான அரசு. அதுவும் பொது நிர்வாகம், பொலிஸ், நிதி போன்ற சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்களையும் தரைப்படை, கடற்படை, விமானப்படை, புலனாய்வுப் படை என பாதுகாப்புக் கட்டமைப்புக்களையும் கொண்டு ஒரு தனி அரசாக விளங்கியது.

எனினும் 2009 மே மாதம் 19 ஆம் திகதியுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் அதிகாரம் முற்றாகவே செயலிழக்கச் செய்யப்பட்டு ஒரே அரசின் கீழ் கொண்டு வரப்பட்டது.

ஆனால் அண்மையில் இடம்பெறும் பல சம்பவங்கள் இலங்கையில் ஓர் அரசுதான் உள்ளதா அல்லது இதே அரசுக்குள் இதைவிட இன்னுமொரு வலிமைமிக்க அரசு இயங்குகிறதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன.

''எனது கோரிக்கைக்கு அமைவாகவே வெலிவேரியாவில் இராணுவம் களமிறக்கப்பட்டது. அங்கு கலகம் வெடிக்கும் என்பதாலேயே நான் பாதுகாப்புப் படையினரை அழைத்தேன்"

அதைக் கூறியவர் பொலிஸ் மா அதிபரல்ல; கொழும்பு வடக்கின் பிரதிப் பொலிஸ் மா அதிபருமல்ல; நிறைவேற்று அதிகாரம் கொண்ட முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுமல்ல.

இவர்களைவிட சக்தியும் அதிகாரமும் படைத்த அந்த வல்லவர் யார்?

வேறு எவருமல்ல!

பொதுபலசேனாவின் பொதுச் செயலர் கலபகொடை ஞானசாரதேரர். ஆம் அவர் தான் அப்படிச் சொன்னார்.

மதுபோதையில் வாகனம் ஓட்டியமைக்காக, கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் புகுந்து சேதங்களை விளைவித்து அங்கிருந்த மதகுருவை வயிற்றில் காலால் உதைத்தமைக்காக வழக்குகளை எதிர்கொண்டிருக்கும் ஒரு பௌத்த பிக்குதான்.

இப்படி அவர் சொல்லியமைக்காக எவரும் அவரைக் கண்டிக்கவில்லை. பாதுகாப்புப் படையினரின் கடமை தொடர்பாகப் பிழையான தகவலை வழங்கினார் என அவர் மேலும் குற்றம் சுமத்தவுமில்லை.

சம்பவ இடத்துக்குப் படையினரை அழைத்தது தானே என பொலிஸ் மா அதிபர் தெரிவிக்கவுமில்லை.

பொதுபலசேனா என்பது பாதுகாப்புச் செயலரின் செல்லப் பிள்ளை என்பது பலரதும் கருத்து. பொதுபலசேனவின் காரியாலயத்தைத் திறந்து வைத்து அதற்கு சமூக அங்கீகாரம் வழங்கியவர் பாதுகாப்புச் செயலர் என்பதும் நினைவு கூரத்தக்கது.

எனவே அவரின் கூற்றில் உண்மை இருக்கலாம். வெலிவேரியா மக்கள் பால் பாயாசம் கேட்கவில்லை. குடிதண்ணீர்தான் கேட்டார்கள். அதிலும் குடிதண்ணீரில் நஞ்சைக் கலக்காதீர்கள் என்றுதான் கேட்டார்கள்.

குடிதண்ணீரை அசுத்தப்படுத்தும் இறப்பர் கையுறைத் தொழிற்சாலையின் உரிமையாளர் அரசியல் செல்வாக்கு உள்ளவராம். அவர் நீரை நச்சுப்படுத்துவதைத் தடுக்க முயன்றால் கலகம் விளைவிப்பாராம். அதற்காக அவர்கள் நடத்திய வீதி மறியல் போராட்டம். அது மக்களின் ஜனநாயக உரிமை. அதனால் கலகம் வெடிக்கும் என அஞ்சி ஞானசார தேரர் ஆயுதப் படையை அழைத்தாராம்.

வியப்பு மட்டுமல்ல வேடிக்கையும்தான்.

புத்தகாயாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு எதிராக இந்திய தூதுவராலயத்தை முற்றுகையிட்டு பொதுபலசேன உட்படக் கடும்போக்கு அமைப்புக்கள் போராட்டம் நடத்தினர். அதனால் பல மணிநேரம் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது.

பொலிஸாரும் பார்த்திருந்தனர். இராணுவம் வரவழைக்கப்படவில்லை. பங்களாதேஷில் விகாரை ஒன்று தாக்கப்பட்டமைக்கு எதிராக பங்களாதேஷ் தூதரகத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்பட்டது. வன்முறைப் பிரயோகம் இடம்பெற்றது. தூதரகத்தின் பெயர்ப்பலகை பிடுங்கி எறியப்பட்டது. பொலிஸார் பார்த்திருந்தனர்.

இராணுவம் வரவழைக்கப்படவுமில்லை. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவுமில்லை. பொதுபலசேனாவும் அவர்களுடன் இணைந்த கடும்போக்கு அமைப்புகளும் நாட்டின் கௌரவத்தைக் கெடுக்கும் வகையிலான வன்முறைகளில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு எதிராக இராணுவம் வராது. ஆனால் குடிதண்ணீர் கோரி ஜனநாயகப் போராட்டம் நடத்தும் அப்பாவி மக்களுக்கு எதிராக அவர்கள் இராணுவத்தை அழைப்பார்கள். அவர்களும் போய் சுடுவார்கள். இப்போ பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்களா என்று விசாரணை நடத்தப்படுவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். மேலும் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டதா எனக் கண்டுபிடிக்கப் படையினரின் துப்பாக்கிகள் இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனவாம்.

இதுவரை இலங்கையில் 16 பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன. மஹியங்கனையில் நோன்பு நாள்களில் மசூதிக்குள் பன்றி இறைச்சி வீசப்பட்டது. கொழும்பு புறநகர்ப் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. மட்டக்களப்பில் ஒரே இரவில் மூன்று இந்துக் கோயில்கள் உடைக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டன.

இந்த வன்முறைகள் அனைத்தையும் பொதுபலசேனா, இராவண அமைப்பு போன்றவையே முன்னின்று செய்தவை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. பல சமயங்களில் அவர்களே அவற்றை ஒப்புக் கொண்டுள்ளனர்.

அந்த இடங்களில் பொலிஸார் நின்றிருந்தாலும் அவர்கள் அவற்றைத் தடுக்க முயல்வதில்லை. இராணுவத்தை அழைப்பதுமில்லை. எவரும் கைது செய்யப்படுவதுமில்லை.

ஆனால் மட்டக்களப்பில் கோயில்கள் உடைக்கப்பட்டபோது அதற்கெதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தலைமையில் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது மக்கள் அச்சுறுத்தப்பட்டனர். இராணுவத்தினர் நேரடியாகவே இறங்கி மக்களை ஊர்வலத்தில் கலந்துகொள்ளாமல் தடுத்தனர்.

அதனால்தான் இலங்கையில் இரு அரசுகள் இயங்குகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.


அதாவது வெலிவேரியா மக்களின் குடிதண்ணீர்ப் போராட்டம், நீர்கொழும்பு மீனவர்களின் எரிபொருள் விலையுயர்வுக்கு எதிரான போராட்டம், கட்டுநாயக்கா தொழிலாளர்களின் கட்டாய, ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிரான போராட்டம் போன்ற நியாயமான போராட்டங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு ஆட்கொலை நடத்தவும் தமிழ். முஸ்லிம் மக்களின் வழிபாட்டு மையங்கள் மீது வன்முறைகளைமேற்கொள்ளவும் அனுமதி வழங்கும் அதிகாரம் கொண்ட இன்னுமொரு அரசு இலங்கை அரசுக்குள் இயங்குகிறதா என்ற கேள்வி எழுகிறது.

எப்படியிருந்தபோதிலும் தமிழ் மக்களை நரவேட்டையாடிய துப்பாக்கிகள் இப்போ நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கும் சிங்கள மக்களையும் இலக்கு வைக்க ஆரம்பித்துவிட்டன. இந்தக் கொடிய போக்கை மறைக்க சிங்கள பௌத்த கடும்போக்குவாதம் ஒரு கவசமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த இனவாத மாயை கலைந்து சிங்கள மக்கள் விழிப்படையும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை என்பதுதான் யதார்த்தம். ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உயிர் கொல்லும் இயந்திர நுளம்பு



அமெரிக்கா அணுகுண்டு யுகத்தைவிட்டு இன்னொரு தளத்திற்குத் தன் போரியல்ஆற்றல்களை வளர்க்கத் தொடங்கியுள்ளது. அதன் ஒரு கட்டமாக நுளம்புபோன்ற தொலை இயக்குக் கருவியால் செயற்படக்கூடிய இயந்திர நுளம்பொன்றைக் கண்டுபிடித்துள்ளது. மிக நுண்ணிய கமராக்கள் பொருத்தப்பட்ட இந்த நுளம்பு அதி சக்திவாய்ந்த வெடிபொருள்களைச் சுமந்து செல்லக்கூடியது. எதிர்காலத்தில் தன் இலக்குகளை எந்தவிதத் தடயங்களுமின்றித் தாக்கியளிப்பதற்கு இத்தகைய மிகச்சிறிய நுளம்புகளையே அமெரிக்கா நம்பியிருக்கப்போகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2013 ஒகஸ்ட் 14 ஆம் திகதி வெளியிட்டது.